# நகரசபைகளை தி.மு.க.கூட்டணி கைப்பற்றியது

Registered as a News Paper in Ceylon  விலை சதம் 15 ★ ★

வாடிக்கையாளர்கள்
மற்றும்
அன்பர்கள் - ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
அன்பு கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்

பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.
தந்தி: 'வைரம்' தொலைபேசி: 7199

ஈழநாடு
THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண் : 49
போன் : 389
மலர் 12
இதழ் 322
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் மார்கழி 16 துல்கஃதா 2 வியாழக்கிழமை (31-12-70)

வாடிக்கையாளர்கள்
மற்றும்
அன்பர்கள்-ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
அன்பு கலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்

கதிர் ஹார்ட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

## 3 இடங்களில் நிஜலிங்கப்பா காங்கிரஸ்

சென்னை, டிசம்பர் 30

தமிழ்நாட்டில் பத்து நகரசபைகளுக்கு நடைபெற்ற தேர்தலில் ஆறு நகரசபைகளை திராவிட முன்னேற்றக்கழக முற்போக்குக் கூட்டணி கைப்பற்றியுள்ளது. மூன்று நகரசபைகளை நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியினர் கைப்பற்றியுள்ளனர். ஒரு நகரசபையில் பெரும்பான்மை பலம் யாருக்கும் கிடைக்கவில்லை.

தமிழ்நாட்டில் நடைபெற்ற 10 நகரசபைத் தேர்தல்களில் 6 நகரசபைகளில் தி. மு. க. முற்போக்கு கூட்டணிக்கு பெரும்பான்மை கிடைத்துள்ளது. கோயம்புத்தூர், திருப்பூர், திருவண்ணாமலை 2, நாகப்பட்டினம், வாணியம்பாடி, திண்டுக்கல் ஆகிய இடங்களில் தி மு க முற்போக்கு கூட்டணி பெரும்பான்மை அடைந்துள்ளது.

மாயூரம், கொளச்சல், திருச்சி ஆகிய மூன்று இடங்களிலுள்ள நகரசபைகளில் நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ் பெரும்பான்மை பலம்பெற்றுள்ளது. அருப்புக்கோட்டை நகரசபைத் தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மைபலம் கிடைக்கவில்லை.

சில விபரங்கள் வருமாறு:

**கோயம்புத்தூர் நகரசபை**

தி. மு. க. 12, ஜனசங் 7, பாரத கம்யூனிஸ்ட் 7, முஸ்லிம்லீக் 1, நிஜலிங்கப்பா காங்கிரஸ் 7.

**திருச்சி**

நிஜலிங்கப்பா காங்கிரஸ் 11, தி மு க 5, சுதந்திரா 1, மு லீக் 1.

**திருப்பூர்**

தி மு க 11, பாரத கம்யூனிஸ்ட் 6, ஜனசங் 4, பி சோஷலிஸ்ட் 2, முஸ்-லீக் 2, நி காங்கிரஸ்-2, சுதந்திரா 3.

**மாயவரம்**

நிஜ. காங்கிரஸ்-22, சுதந்திரா-2, தி மு க 6, பாரதிய கம்யூனிஸ்ட் 1, திராவிடக் கழகம் 1,

**கொளச்சல்**

தி மு க 11, ஜனசங் 3, முஸ்லீம்லீக் 2, திராவிடக் கழகம் 1, தமிழரசு 1, நிஜ காங் 10, சுதந்திரா 2, மாக்ஸிட் 2.

**வாணியம்பாடி**

முஸ்லீம் லீக் 11, தி மு க 6, நிஜ-காங்கிரஸ் 2, மாக்ஸிஸ்ட் 7, சுதந்திரா 7.

# கலப்புத் திருமணம் பற்றி தாம் பேசவில்லையாம்

## செனட் சபையில் குமாரசூரியர் மறுப்பு

— நமது நிருபர் கே. ஜி. நவரத்ன —

கொழும்பு, புதன்

தேசிய ஐக்கியத்தை உருவாக்க சிங்கள-தமிழர்களுக்கிடையில் கலப்புத்திருமணம் ஏற்படுவதுதான் ஒரே வழி என்று தாம் கூறியதாக வெளிவந்துள்ள செய்தியை தபால் தந்தி அமைச்சர் திரு. குமாரசூரியர் இன்று செனட்சபையில் மறுத்தார்.

செனட்சபையில் வரவு செலவுத்திட்டத்தின் மீது ... பேசியதாக வெளிவந்த செய்தி ... பிரஸ்தாபித் ...

அமைச்சர் குமாரசூரியர் உடனடியாக எழுந்திருந்து இப்படியான ஒரு கருத்தைத் தாம் ஒருபோதும் வெளியிடவில்லையென்று மறுப்புத் தெரிவித்தார்.

இந்த மறுப்பை செனட்டர் நடராசா ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார்.

**பெடரிக் கோட்டை**

திருக்கோணமலை பெடரிக் கோட்டையின் பெயரை ராஜசிங்கன் கோட்டை யென மறுபெயரிடப்படுவது குறித்து செனட்டர் ...

கலப்புத் திருமணங்கள் போலவே இதிலும் கலப்பு ஏற்பட்டுவிடும் என்று செனட்டர் நடராசா சிலேடையாக பதிலளித்தார்.

மேற்படி கோட்டையில் கோணேஸ்வரம் ஆலயம் இருப்பதால் கோணேஸ்வரக் கோட்டையென்று பெயரிடுவதுதான் நல்லது என்று செனட்டர் நடராசா தெரிவித்தார். இப்போதைய ஆங்கிலப் பெயரை தமிழர்கள் ஆட்சேபிக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் மாற்றுப் பெயர் விஷயத்தில் தமிழர்களும் கலந்துகொள்ளப் ...

தமிழ்நாடு கல்லூரி மாணவர்கள்

## பயிற்சி மொழிபற்றி ஆராய கமிட்டிதேவையில்லை

### முன்னாள் நீதியரசர் கருத்து

சென்னை, டிசம்பர் 30

பயிற்சிமொழிப் பிரச்னை பற்றி ஆராய நிபுணர் கமிட்டி எதுவும் தேவையில்லை என்று முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதியும், சென்னை ஜீவாதார உரிமைக் கவுன்சில் தலைவருமான பஷீர் அகமது சையது கூறினார்.

இவர் தமிழ்நாடு முதல் அமைச்சர் கருணாநிதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது: தமிழகத்திலுள்ள அரசு, தனியார் கல்லூரிகளில் பயிற்றுமொழி எதுவாக இருக்கவேண்டுமென்பது பற்றி அரசுக் ஆலோ ...

விரைவான நடவடிக்கையை ஜாக்கிரதையாக எடுக்க வேண்டும். இதில் அஜாக்கிரதையாக இருந்தால் மாணவர் போராட்டம் வன்முறையாக மாறி மக்கள் அரசு சொத்துக்கு சேதம் விளைவிக்கக்கூடும். எந்தப் பிரச்சினையிலும் வன்முறையைப் பாவிக்காவிட்டால் அப்பிரச்னை சரியான முறையில் தீர்க்கப்படாதென்று மக்கள் எண்ணுவதே இதற்குக் காரணம். தனியார் கல்லூரிப் பயிற்சிமொழியை மாணவர், பெற்றோர் முடிவுக்கு விட்டுவிடவேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

### திருவெம்பாவை விழா

எழுமட்டுவாள், புதன்

எழுதுமட்டுவாளில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிவன்கோவிலில் இம்முறை முதன்முறையாக திருவெம்பாவைத் தினங்களில் விசேட பூஜை, ஆராதனைகளும், பஜனைகளும் நடைபெறும். திருவாதிரைத்தீர்த்த விழாவின் பின்னர் மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

......

### இலங்கையில் ஐ. அ. குடியரசு சபாநாயகர்

கோட்டை, புதன்

இங்கு வந்துள்ள ஐக்கிய அரபுக் குடியரசு தேசிய ...

# மகாஜன சம்பத சுவீப் முடிவுகள்

கொழும்பு, புதன்

இன்று இழுக்கப்பட்ட 22-வது மகாஜன சம்பத சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

**முதல் பரிசு பெறும் மூன்று டிக்கட்டுகள்:-**

01 C 000240 ரூ. 55,690
05 K 000510 ரூ. 55,690
01 T 000450 ரூ. 55,690

தலா ரூபா 278-45 சதம் ஆறுதல் பரிசு பெறும் 200 டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 06A000422 | 12D000536 |
| 22U000680 | 02S000544 |
| 19U000735 | 09Y000701 |
| 11R000341 | 10P000964 |
| 29K000727 | 12U000509 |
| 09D000018 | 07Y000619 |

| | |
|---|---|
| 18N000596 | 03C000521 |
| 15K000437 | 20Z000556 |
| 24C000236 | 08C000803 |
| 02X000520 | 08P000861 |
| 09T000397 | 09H000743 |
| 01A000381 | 21H000486 |
| 09M000800 | 18Q000218 |
| 04G000800 | 12W000004 |
| 08J000735 | 07Q000448 |
| 12J000783 | 08V000517 |
| 23W000205 | 16W000250 |
| 06F000805 | 04Z000569 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது: தமிழகத்திலுள்ள அரசு, தனியார் கல்லூரிகளில் பயிற்றுமொழி எதுவாக இருக்கவேண்டுமென்பது பற்றி அரசுக்கு ஆலோசனை கூறுவதற்குக் கமிட்டி அல்லது கமிஷன் நியமிப்பது அவசியமற்றது. பலதடவைகளில் கமிட்டிகளும், கமிஷன்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றன. கல்லூரிப் பயிற்சிமொழி எதுவாக இருக்கவேண்டுமென்று அவை தெளிவாகக் கூறியிருக்கின்றன. எனவே அரசு இதனைப் புனராலோசனைசெய்து மக்கள் எண்ணுவதே இதற்குக் காரணம். தனியார் கல்லூரிப் பயிற்சிமொழியை மாணவர், பெற்றோர் முடிவுக்கு விட்டுவிடவேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

### கமிட்டி நியமனம்

ஆனால் தமிழ்நாடு அரசு 5 பேர் கொண்ட நிபுணர் கமிட்டி ஒன்றை நியமித்துள்ளது. இக்கமிட்டி பயிற்சிமொழித் திட்டத்தால் ஏற்படக்கூடிய விளைவுகளையும், மாணவர் பிரச்னைகள் ஆகியவற்றுக்கும் ஆலோசனை கூறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## ஐ. அ. குடியரசு சபாநாயகர்

கோட்டை, புதன்

இங்கு வந்துள்ள ஐக்கிய அரபுக் குடியரசு தேசிய சபையின் சபாநாயகர் டாக்டர் சுக்கே காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு ஆர் டி பண்டாரநாயக்காவின் சமாதிக்கு இன்று மலர்வளையம் சாத்தினார். இவர் நாளைக் காலை பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவைச் சந்தித்துப் பேசுவார்

— —

சூரியர் இன்று செனட்சபையில் கூறினார்.

செனட்சபையில் வரவு செலவுத்திட்டத்தின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது திரு. குமாரசூரியர் பேசியதாக வெளிவந்த செய்திபற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சி செனட்டர் உஸ், நடராஜா பேசுகையில் திரு குமாரசூரியரின் கூற்று பற்றி குறிப்பிட்டார்

கலப்புமணம் பற்றி திரு குமாரசூரியர் கூறியுள்ள கருத்தை செய்திப் பத்திரிகையில் படித்தேன் குமாரசூரியர் போன்ற ஒரு மானமுள்ள தமிழன் இதைச் சொல்லியிருக்க முடியும் என்று என்னால் நம்பமுடியவில்லையென்று செனட்டர் நடராசா கூறினார்

### அமைச்சர் மறுப்பு

செனட்டர் நடராசா இக்கருத்தை வெளியிட்டதும் தார்

### பெடரிக் கோட்டை

திருக்கோணமலை பெடரிக் கோட்டையின் பெயரை ராஜசிங்கன் கோட்டை யென மறுபெயரிடப்படுவது குறித்து செனட்டர் நடராசா குறிப்பிட்டார்.

திருகோணமலை எம் பி திரு நேமிநாதனும், மேயர் டாக்டர் சிவானந்தனும் அரசாங்க அதிபர் லயனல்பெர்ணண்டோவைச் சந்தித்து இதுபற்றிவினவினார்கள் என்றும் இப்பெயர் மாற்றம் பற்றி உத்தியோக பூர்வமாகத் தமக்கு அறிவிக்கப்படவில்லையென்று தெரிவித்துள்ளனர் என்றும் செனட்டர் நடராஜா தெரிவித்தார்

செனட்டர் கிச்சிலான் ராஜசிங்கன்கோட்டைஎன்று பெயரிடப்படுவதை நீங்கள் எதிர்க்கிறீர்களா?

துவதுதான் நல்லது என்று செனட்டர் நடராசா தெரிவித்தார் இப்போதைய ஆங்கிலப் பெயரை தமிழர்கள் ஆட்சேபிக்கத்தான் செய்கிறார்கள் ஆனால் மாற்றுபெயர் விஷயத்தில் தமிழர்களும் கலந்துகொள்ளப்படவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள் என்றார் அவர்

### வரவு செலவு திட்டம் பற்றி

வரவுசெலவுத்திட்டம் பற்றி செனட்டர் நடராசா குறிப்பிட்டுப்பேசுகையில், இந்த அரசு தன்னை மக்கள் அரசு என்று சொல்லிக்கொண்டபோதிலும் வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிக்கும்பொழுது சகலமக்களையும் கருத்தில்கொண்டதாகத் தெரியவில்லையென்றார்.

(4-ம் பக்கம் பார்க்க)

ஆறுதல் பரிசு பெறும் 200 டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 06A000422 | 12D000536 |
| 22U000680 | 02S000544 |
| 19U000735 | 09Y000701 |
| 11R000341 | 10P000964 |
| 20K000727 | 12U000509 |
| 09D000018 | 07V000619 |
| 03X000571 | 15B000808 |
| 03L000539 | 17c000312 |
| 08P000723 | 19S000815 |
| 10D000830 | 04Q000848 |
| 15P000871 | 20N000664 |
| 02N000494 | 20L000561 |
| 02F000653 | 21G000427 |

| | |
|---|---|
| 09T000397 | 09H000743 |
| 01A000381 | 21H000486 |
| 09M000800 | 18Q000218 |
| 04C000800 | 12W000004 |
| 08J000735 | 07Q000448 |
| 12J000783 | 08V000517 |
| 23W000205 | 16W000250 |
| 06F000805 | 04Z000569 |
| 04o000852 | 06M000069 |
| 19Q000856 | 15U000084 |
| 04Z000737 | 04D000631 |
| 07A000811 | 17B000053 |
| 17W000729 | 10R000570 |
| 05W000593 | 03F000329 |

(4-ம் பக்கம் பார்க்க)

# சமூக சீர்கேடுகளை ஒழிக்க மலலசேகரா முயற்சி

### சமயத் தலைவர்களின் மகாநாட்டைக் கூட்டுகிறார்

கோட்டை, புதன்

நாட்டில் நிலவும் லஞ்ச ஊழல் ஒழுங்கீனம், நேர்மையின்மை மற்றும் சமூக சீர்கேடுகளைக் களைந்தெறிவது பற்றி ஆராய்வதற்கு சகல மதங்களையும் சேர்ந்த தலைவர்களும் விரைவில் சந்தித்துப்பேசவிருக்கிறார்கள்.

இதற்கான ஒரு மகாநாட்டை அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் டாக்டர் மலலசேகரா அடுத்தவருடம் ஜனவரி மாதத்தில் கூட்டவிருக்கிறார்.

தற்போதைய சமூகத்தில் நிலவும் ஒழுங்கீனங்களைக் களைவதற்கான யோசனைகளைத் தெரிவிக்கும்படி இத் தலைவர்களை டாக்டர் மலலசேகரா கேட்கவிருக்கிறார்.

நாட்டில் சீரான சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்பும்வகையில் சகல மதத் தலைவர்களும் ஒரே மேசையில்கூடி தமது கடமைகளைப் பற்றி ஆராய்வது அவசியம் என்று அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்

சிங்கள வாழ்வைப் பற்றி அதிகமாக வலியுறுத்தப்படும் இன்றைய நிலையில் மதத்தலைவர்கள் மிகமுக்கிய பங்கேற்று சமூகச் சீர்கேடுகளை ஒழிக்க முயற்சி எடுக்க வேண்டு என்று டாக்டர் மலலசேகரா தெரிவித்தார்

### பாடப் புத்தகங்கள் அன்பளிப்பு

புலோலி புதன்

பருத்தித்துறை எம் ஜீ ஆர் மன்றம் அத்தியடி சித்திவிநாயகர் பாடசாலை வசதி குறைந்த மாணவர்களுக்கு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடப் புத்தகங்களை வழங்கியுள்ளது

நேற்று முன்தினம் மன்றத்தலைவர் பாடப்புத்தகங்களை பாடசாலை அதிபரிடம் கையளித்துள்ளார்

# இலங்கை - சீன பேச்சுக்களில் சிக்கல்?

கோட்டை, புதன்

இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் நடைபெற்று வரும் ரப்பர்-அரிசி பேச்சுவார்த்தைகளில் சிக்கல் ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

சீனா தனது அரிசிக்கு அதிக விலை கேட்பதாகவும் இலங்கை தன்னால் அவ்வளவு தொகை செலுத்துவது சாத்தியமில்லையெனத்தெரிவித்திருப்பதாகவும் கருதப்படுகின்றது. ஒரு டன் அரிசிக்கு 37 பவுண் சீனா கேட்பதாகவும் ஆனால் 33 பவுண் மாத்திரமே கொடுப்பது சாத்தியமாகும் என இலங்கை தெரிவித்திருப்பதாகவும் கருதப்படுகின்றது. உலகச் சந்தையில் அரிசியின் விலை ஒரு டன் 36 பவுணாகும்.

இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான வருடாந்த வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் இப்பொழுது கொழும்பில் வர்த்தக அமைச்சின் அதிகாரிகளுக்கும் சீன தூதுக் குழுவுக்குமிடையில் நடைபெற்று வருகின்றது. இப் பேச்சுவார்த்தைகளுக்கெனவே தூதுக்குழுவொன்று சீனாவிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளது

இரு நாடுகளுக்குமிடையில் ஏற்கெனவே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி 200,000 டன் அரிசியை சீனா இலங்கைக்கு விற்கவும் 44,000 மெட்ரிக் டன் ரப்பரை சீனாவுக்கு இலங்கை ஏற்றுமதி செய்யவும் வழி செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்காகவே இப்பொழுது பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது. உலக சந்தையிலுள்ள விலையைவிட அதிக விலையை சீனா கோருவதாக இலங்கை சுட்டிகாட்டியிருப்பதாகத் தெரிகின்றது.

பேச்சுவார்த்தைகள் மிக நேச பூர்வமான சூழ்நிலையில் நடைபெற்று வருவதாகத் தெரிகின்றது.

### சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வியா

டாக்டர் சிறில்பொன்னம்பெருமாவின் சொற்பொழிவு நாளை மறுதினம் சனியன்று யாழ் நகரமண்டபத்தில் இடம்பெறவிருக்கிறது வடமாகாண விஞ்ஞான ஆசிரியர்சங்கம் இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளது.

# கேள்வித்தாள் வெளியானது சதிவேலையாம்

கோட்டை, புதன்

பொதுத் தராதரப் பரீட்சைக்கான கேள்விப் தாள்கள் வெளியாகியது அரசாங்கத்தின் மீது அதிருப்தியை ஏற்படுத்துவதற்காக வேண்டுமென்றே யாரோ செய்த சதிவேலையாகும் என்று லங்கா மாணவர் சம்மேளனம் கருத்துத் தெரிவித்துள்ளது.

இதில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், சந்தேகத்துக்குள்ளான உயர் அதிகாரிகள் உட்பட அனைவர் பற்றியும் ஆராயவேண்டுமென்றும் இனிமேலும் இப்படியான சம்பவங்கள் நிகழாமல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் மேற்படி சம்மேளனம் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது.

தேர்தல் சுதந்திரமாக நடைபெற

# மத்தியில் தேசிய அரசு வேண்டுமாம்

### நிஜலிங்கப்பா காங்கிரஸ் கோரிக்கை

புதுடில்லி, டிச. 30

பொதுத்தேர்தலை நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடத்துவதற்கு மத்தியில் தேசிய அரசு ஒன்று ஏற்படவேண்டும் என்று திரு. நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியின் ஆட்சிமன்ற போர்டு ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டிருக்கின்றது.

ஆளும் கட்சி தனது குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காகவே இடைத்தேர்தலுக்கு ஏற்பாடு செய்திருக்கின்றது என்று போர்டு கருத்து வெளியிட்டுருக்கின்றது அரசியல், பொருளாதார நிலைமை மோசமாகிவிட்ட காரணமாக இடைத்தேர்தல் நடத்தவேண்டிய நிலைமை உருவாகியுள்ளதென்றும் போர்டு தெரிவித்துள்ளது.

ஜனநாயகக் கட்சிகளுடன் இணைந்து எலலா இடங்களுக்கும் காங்கிரஸ் போட்டியிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றுடன் முடியும் 70-ல் வடபகுதி கொலை, கொள்ளைகள்

### பாலைதீவு தான் கோர நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், வியா.

வடபகுதியில் இன்றுடன் முடிவடையும் எழுபதாம் ஆண்டில் 46 கொலைச்சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. பாலைதீவு படகுவிபத்தில் 62 உயிர்கள் பலிகொள்ளப்பட்டதுதான் இந்த வருடத்தில் நிகழ்ந்த மிகப்பரிதாபமான விபத்துச் சம்பவம்.

இவ்வருடத்தில் நிகழ்ந்த 46 கொலைச் சம்பவங்களில் சாவகச்சேரியிலும் கரம்பனிலும் நிகழ்ந்தவைதான் மிகக் கொடூரமான கோரச் சம்பவங்களாகப் பொலிசார் கருதுகின்றனர்.

கொலைச்சம்பவங்களுக்குக் காணித்தகராறு, பழைய குரோதங்கள், திடீர்ஆத்திர மூண்டல் ஆகியவைகளே காரணமாக இருப்பதாக விசாரணைகளிலிருந்துதெரிய வந்திருப்பதாக பொலிஸ் அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள தமது அறிக்கையில் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது

கொலைகளுக்கு கத்தி துப்பாக்கிகளே பெரிதும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதாம்

களவு, கொள்ளை என நாற்பது பெரிய சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன இதில் ஒரு வீட்டில் மட்டும் பதினையாயிரத்துக்கு மேற்பட்ட தொகை நகைகளாகவும் ரொக்கமாகவும் கொள்ளையடிக்கப்பட்டதே இப்பகுதியில் நடந்த பெரியகொள்ளைச் சம்பவமாகும்

வாழைக்குலை, நாற்காலிகள், மின்விளக்கு பல்புகள் போன்ற சிறிய திருட்டுக்கள் இப்பகுதியில் நடைபெற்று வருகின்றனவென்றும், சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்து வருவதாகவும், ஆனால் இவைகளுக்கு பொருள்களின் உரிமையாளர்களின் கவனக்குறைவே காரணமென்றும்பொலிசார் கருதுகின்றனர்

திட்டமிட்ட திருடர் கோஷ்டிகளினால் இங்கு கொலை, கொள்ளைச் சம்பவங்கள் இவ்வருடத்தில் நடைபெறவில்லையென்றும் பொலிசார் கருதுகின்றனர்


## ஏக விநியோகஸ்தர்

யாழ்ப்பாணம், பெரியகடை பத்திரிகை விற்பனையாளர்

திரு. சங்கரப்பிள்ளை கிருஷ்ணசாமி அவர்களை

1-1-71 முதல் யாழ்ப்பாணம் பெரியகடை (Grand Bazaar) சுற்றாடலுக்கு எங்கள் பத்திரிகை விற்பனைக்கு ஏகவிநியோகஸ்தராக நியமித்துள்ளோம்.

காரியாலயத்தில் நேரில் வந்து பத்திரிகை பெறும் விற்பனையாளரும் எங்கள் பையன்கள் மூலம் பத்திரிகை பெறுவோர்களும் மேற்படி விநியோகஸ்தரிடம் தங்களுக்குத் தேவையான பத்திரிகையை முன்கூட்டியே தெரிவித்துப் பெற்று விநியோகிக்க வேண்டுகிறோம்.


# ரூ. 60000 பெறுமதியான கராம்பு மூடைகள் பிடிபட்டன

யாழ்ப்பாணம், வியாழன்

சுமார் அறுபதினாயிரம் ரூபாய் பெறுமதியான கராம்பு மூடைகள் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை தென் கிழக்கிலுள்ள ஒரு வீட்டிலிருந்து ஊர்காவற்றுறை உதவிச் சுங்கக்கலெக்டர் திரு, எம் வீரசுந்தரத்தினால் கைப்பற்றப்பட்டதாம், கராம்பு மூடைகள் ஒரு லொறியில் ஏற்றப்படும் பொழுது கைப்பற்றப்பட்டதாகவும் இவற்றை ஏற்றிக்கொண்டிருந்ததாக மூவர் சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டுப் பின்னர் பிணையில் விடப்பட்டதாகவும் கூறுப்படுகிறது,

இக்கராம்பு மூடைகள் இந்தியாவுக்குக் கள்ளக் கடத்தல் செய்வதற்காக ஏற்றப்பட்டுக்கொண்டிருந்ததாக சுங்கப் பகுதியினர் கருதுகின்றனர்

கைப்பற்றப்பட்ட கராம்பு மூடைகளைப் பறிமுதல் செய்த சுங்கக் கலெக்டர் திரு, சேனரத் இது சம்பந்தமாகத் தொடர்ந்து புலன் விசாரணை செய்துவருகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

ஸ்ரோர்க்கீப்பரும், காசாளரும்:

இரசாயனத்திலும், பௌதிகத்திலும் விசேட சித்தி உட்பட க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்த ஸ்ரோர் கீப்பரும், கணிதம், அல்லது எண் கணிதத்தில் விசேட சித்தி உட்பட க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்த காசாளரும் தேவை. பிணை: ஸ்ரோர்கீப்பருக்கு ரூபா 4000 காணியாகவும், ரூபா 1000 காசாகவும். காசாளருக்கு ரூபா 1000 காசாக. மனுச்செய்ய வேண்டிய கடைசித் திகதி 10-1-71. காரியதரிசி, வல்லை கூட்டுறவு வைத்தியசாலை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை. 2610

### விற்பனைக்கு

ரைகர் கப் 1 சிறீ மோட்டார் சைக்கிள் உன்னதமான நிலையில் பல எக்ஸ்ராஸ் உடன் விற்பனைக்குள்ளது. 291, நாவலர் வீதி, ஆனைப்பந்தியில் பார்வையிடலாம். 2611

### விற்பனைக்கு

5 மாதம் பாவித்த சோனி ட்ரான்சிஸ்டர் ரேடியோ-3 அலை வரிசை. கல் வையாபுரி வீடு, பின்னை யார் கோவிலடி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை 2615


## அறிக்கை சமர்ப்பிப்பார்

கோட்டை, புதன்

ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சை கேள்வித்தாள்கள் வெளியானது பற்றி முழு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்விமந்திரி டாக்டர் பதியுதீன் மஃமூத் கேட்டுள்ளார். பரீட்சைக் கமிஷனர் டாக்டர் கே.ரி. டபிலியூ சுமணசூரிய விரைவில் அறிக்கை சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

எண் கணித, பொருளாதார கேள்வித்தாள்கள் வெளியானதாக இரகசியப் பொலிசார் தெரிவித்ததைத் தொடர்ந்து, அவ்விரு கேள்வித்தாள்களையும் கல்விமந்திரி ரத்துச்செய்திருந்தார்.

இதற்கிடையில், இப்பரீட்சைக்குரிய மற்றும் கேள்வித்தாள்களும் வெளியாகியுள்ளனவென்று தொடர்ந்து கல்வி அமைச்சுக்குப் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.


## வெளிவந்து விட்டது!

க. பொ. த. (சா நி.) மாணுக்கர்கள் ஆவலோடு எதிர்பார்த்த

### இளநிலைப் பிரயோக கணிதம்

ஆக்கியோன், ம. கங்காதரம் B.Sc (Lond.)

விற்பனை உரிமை;

ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

2707

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

எம்.ஜி.ஆர்— லட்சுமி ஜெயலலிதா — அசோகன் நடித்த

## மாட்டுக்கார வேலன்

ராஜா - யாழ். நகர்

தினசரி காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30

## ஏசுநாதர் -தமிழ்

இப்படத்துடன்

### அறிஞர் அண்ணாவின் இறுதியாத்திரை


## இன்றைய பலன்

மார்கழி மாதம் 16-ம் திகதி [31-12-70]

மேஷம்- வாழ்வில் வெற்றித் திருநாளாகும், எதிலும் அதிர்ஷ்டம் உங்கள் பக்கமே இருக்கும் இன்று சுப தினம்

ரிஷபம்- இதயத்தில் ஏக்கம் இன்று தணியும். தேடிய பொருள் காலடியில் சரணடையும் பரோபகார சிந்தை மேலிடும்.

மிதுனம்- இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும். காதல்கணை தாக்கும், கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

கடகம்- இல்லறத்தில் இனிமை தவழும். வெளியிடத்துத் தொடர்புகள் பெருகும். இனசனங்களின் உதவியும் செல்வாக்கும் உயரும்.

சிம்மம்- நம்பிக்கை மோசடி நடக்கும் நண்பர்களும் காலை வாரிவிடுவர். தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும்.

கன்னி: அரச பயத்திற்கு இடமுண்டு. வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ளவேண்டாம். நிதானம் வேண்டும்.

துலாம்- தானிய விருத்தியில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம், விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள், அமைதி விரும்பத்தக்கது

விருச்சிகம்- மக்களால் புகழ் பரவும். மனதில் மகிழ்ச்சி தோன்றும். விஷமிகளின் புனைந்துரைகள் தலைதூக்கும். வாழ்வில் சுகமுண்டு

தனுசு- பழைய நினைவுகள் உங்களை கவலையில் ஆழ்த்தும். பொருள் விரயத்திற்கும் இடமேறபடும். நிதானம் வேண்டும்

மகரம்- பக்கத்தில் படுகுழி, பாத்திருப்பர் பகைவர் விழிப்புடன் இருப்பின் வெற்றி உனதே, கடமையாற்றுமிடத்தில் நிதானம் வேண்டும்

கும்பம்- பொருள் வரவுக்கு இடமுண்டு. சுற்றுடலில் மதிப்பு உயரும். இறை அருளுமுண்டு. பாலுணர்ச்சி மேலுடும்

மீனம்- முன்னேற்றப் பாதையில் தடைகள் தென்படுகின்றன, தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் உருவாகலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## ஐ. நா. உதவியுடன் ஆராய்ச்சி பயிற்சி நிலையம்

கோட்டை, புதன்

ஆராய்ச்சிக்கும் பயிற்சிக்குமென மத்திய நிலையம் ஒன்று ஐ நா உதவியுடன் கொழும்பில் அமைக்கப்படவிருக்கிறது. இதை அமைப்பதற்கான நிதி உதவியை ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித்திட்ட விஷேட நிதிப்பிரிவு வழங்க முன்வந்துள்ளது. இதற்கான உடன்படிக்கை நேற்று கொழும்பில்கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தப்படி விவசாய ஆராய்ச்சி மத்திய நிறுவனத்தை அமைப்பதற்கு ஐ நா விசேட நிதிப் பிரிவு 9 லட்சம் டாலரைக் கொடுத்துதவும். இலங்கை அரசாங்கம் 6 லட்சம் 43 ஆயிரம் ரூபாவை அளிக்கும்.

இந்த நிறுவனம் முதலில் கொழும்பில் இயங்கும் அதன்பின் பேராதனைக்கு மாற்றப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் வெளிநாட்டு நிபுணர்கள் இவ் வாராய்ச்சி நிறுவனத்தில் சேவையாற்றுவார்கள். அதோடு இலங்கையர்களுக்கு இத்துறையில் வெளி நாடுகளில் பயிற்சி அளிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

## லெனின் கிராட் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் சுப்ரீம் நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்யலாம். இந்தத் தீர்ப்புகள் மாற்றப்பட வில்லையானுல் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ரஷ்ய சமஷ்டியின் சுப்ரீம் சோவியத் தலைமைக்குழுவுக்கு விண்ணப்பிக்கலாம்

இந்தக் குற்றத்தில் உடந்தையாக இருந்த இயோஸிவ் மென்டெலிவிச்சுக்கும், யுரி பியோட்ரோவுக்கும் 25 வருடங்களும், அலக்ஸி முர்ஷென்கோவுக்கு 14 வருடங்களும். லபா குனெக்கிற்கு 13 வருடங்களும், அனடலி அல்ட்மனுக்கு 12 வருடங்களும், பொரிஸ் பென்ஸ்ன்ட்லுக்கு 12 வருடங்களும். ஸில்வா ஸ்மன்ஸனுக்கு 20 ஆண்டுகளும், இஸ்ரேல் ஸலமன்ஸ்-க்கு 8 ஆண்டுகளும், மென்டல் பொட்னியாவுக்கு 4 ஆண்டுகளும் சுதந்திர மறுப்புத் தண்டனைகள் விதிக்கப்பட்டன.

பியடரோவும், முர்ஷென்கோவும் கடுமிய உழைப்பு முகாமில் தமது தண்டனைக் காலத்தைக் கழிப்பர். இந்தக்குற்றத்தின் இட்டமிட்ட ஸ்தாபன தன்மை வெளிப்படையாகியது, மேற்கத்திய பகற்கொள்ளைக் காரர்களின் 'உழைப்புப் பிரிவினை' ரகத்தில் இது நடைபெற்றுள்ளது.

இந்தக் குற்றத்தின் சுவடுகள் மேற்குவரை பரந்து நிற்பது சாட்சியங்களால் ருசுபிதமாகியது. டனர்மன் என்னும் பிரிட்டிஷ் கம்பனியின் திரை மறைவின் பின்னுல் இயங்கும் ஒரு [illegible]ப்பிட்ட கோஷ்டி இந்தக் [illegible]ற்றத்தின்பின் இருப்பது வழக்கு விசாரணையின் போது ஸ்தாபிதமாகியது. இத்[illegible] மூலம்[illegible] [illegible]ல் பார்சல்களைப் பெற்றது.

சுட வேண்டும், எவ்வளவு தூரத்திலிருந்து சுட வேண்டும் போன்ற உத்தரவுகளை முன்கூட்டியே பெற்றிருந்தனர்.

விமானம் புறப்படுவதற்கு முன்பு சோவியத் பந்தோபஸ்து அதிகாரிகள் இந்தச் சதித் திட்டத்தை முறிடித்தனர்.

குற்றவாளிகளிடம் கண்டெடுக்கப்பட்ட பூகோளப் படம் இவர்கள் விமானத்தை சுவீடிஷ் நகரமான பெடனுக்கு கடத்திச் செல்லத் திட்டமிட்டிருந்தனர் என்பதை எடுத்துக்காட்டியது

அதற்கு முன்னர் சேவியத் நகரமான பிரியோஸெர்ஸ்கில் விமானம் இறங்கியதும் காட்டில் இரு விமானச் சாரதிகளின் கையையும் காலையும் கட்டிப் போட்டு வாய்களை அடைக்க குற்றவாளிகள் திட்டமிட்டிருந்தனர். இதை முடிந்தளவு தாமதிக்க 'பிரயாணம் இல்லை உயிருக்கு ஆபத்து' என்ற எச்சரிக்கை சமிக்ஞை தயாரிக்கப்பட்டிருந்தது

அதிலிருந்து விமானக் கட்டுப்பாட்டை முன்னாள் விமானச்சாரதியான மார்க் டிமிஸ்டிஸ் மேற்கொள்ள இருந்தார்.

— —

## சென்னை இசைவிழா

### இன்று

சென்னை, டிச.31

தமிழிசைச்சங்கம்

மாலை: 6.00-கே. வி. நாராயணசாமி-பாட்டு, இரவு 9.30: ஏ. கே. ஸி. நடராஜன் கிளாரினட்.

மியூஸிக் அக்கடமி

பி.ப: 1.30-கே. ஆர். சரஸ்வதி-பாட்டு, பி.ப: 3.00- ரி. ஆர். சுப்பிரமணியம் பாட்டு

## 'நினைத்தது நடந்ததா'

யாழ்ப்பாணம், வியாழ

கொழும்பிலுள்ள 'அரங்கு' என்னும் கவின்கலை மன்றத்தாரின் 'நினைத்தது நடந்ததா' என்ற நவீன நாடகம் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்படவிருக்கிறது. சின்னையா சிவநேசன் எழுதி இயக்குவிக்கும் இந்நாடகம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ஜனவரி 13-ம் திகதி மேடையேறும். 'அரங்கின்' தலைவரான யாழ். நவீனசந்தை ஒப்பந்தக்காரரான 'மைற்' நிறுவனத்தின் அதிபர் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா இந்நாடகம் யாழ்ப்பாணத்தில் மேடையேறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

'நினைத்தது நடந்ததா' என்னும் இந்நாடகத்தை சாவகச்சேரி, அராலி ஆகிய இடங்களிலும் நடத்தவிருக்கிறார்கள் எனத் தெரியவருகிறது.

இந்நாடகம் பொங்கல் திருநாளன்று மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கிலும், 11-ம் திகதி கைதடி நுணுவில் அப்பா வெற்றிவேலு வித்தியாசாலையிலும் மேடையேற்றுவதற்கு ஒழுங்குகள்செய்யப்படுவதாகத்தெரிகிறது. இந்நாடகத்தை செனட்டர் ரெஜி பெரேரா உட்படப் பத்திரிகைகளும் பாராட்டியுள்ளனர்.

— —

தெல்லிப்பளை கி, ச.

## புதிய உப தலைவர் ஏகமனதாகத் தெரிவு

மாவிட்டபுரம் புதன்

தெல்லிப்பளைக் கிராம சபையின் புதிய உப தலைவராக திரு. த. மாசிலாமணி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

தெல்லிப்பளை கிராம சபையின் உபதலைவராகக் கடமையாற்றிய திரு எஸ். கதிரிப்பிள்ளை தமது பதவியை ராஜினுமாச் செய்ததையடுத்து சபைத்தலைவர் திரு. எம் சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் புதிய உபதலைவர் தெரிவுநடைபெற்றது அப்போது திரு, த. மாசிலாமணி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இக்கிராம சபையின் சரித்திரத்தில் இம் முறைதான் முதல் தடவையாக உபதலைவர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## இலங்கை வானொலியில் கலைஞர் வாழ்வு

மாவிட்டபுரம், புதன்

இலங்கையிலுள்ள பல் துறையில் முன்னேறிய பழம் பெரும் கலைஞர்களின் அனுபவங்கள். அவர்களின் மறக்கமுடியாத சம்பவங்கள். தொழிலில் அவர்கள் அன்றும் இன்றும் கையாளும் முறைகள் பற்றிய விடயங்கள் அடங்கியஅம்சமொன்று ஜனவரி மாதம் முதல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாக இருக்கிறது.

'நெஞ்சம் நிறைந்த நினைவுகள்' என்னும் தலைப்பில் ஒலிபரப்பாகும் இந்நிகழ்ச்சி ஜனவரி மாதம் முதல் போயா தினங்களில் காலை 11 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்ச்சிக்குப் பொறுப்பாக உள்ள திரு என் சிவராசா தற்போது யாழ் மாவட்டத்தில் பல பழம் பெரும் கலைஞர்களிடம் நேரில் சென்று நிகழ்ச்சிகளைத் தயாரித்துவருகிருர்.

இந்நிகழ்ச்சியின் முதலாவது அம்சமாக பழம்பெரும் கலைஞரான மாவிட்டபுரம் திரு என் உருத்திராபதியின் நாதசுவர வாழ்வின் நிகழ்ச்சிகளும்: அவரது நாதசுர வாசிப்பு ஆகியவற்றையும் ஒலிப்பதிவுசெய்யப்பட்டது. இதையடுத்து யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பழம்பெரும் கலைஞர்களின் நிகழ்ச்சிகளையும், அவர்களைச் சந்தித்து ஒலிப்பதிவு செய்ய திரு என் சிவராசா நடவடிக்கை எடுத்துள்ளார்:

## 'அரசாங்கநெசவுசாலைகளில் இவர்களுக்கு இடமில்லை'

வேலணை, புதன்

"அரசாங்க நெசவு நிலையங்களில் அரசாங்க செலவில் பயிற்றப்பட்டோர், தொடர்ந்து அரசாங்க நெசவு நிலையங்களிலும், கூட்டுறவு நெசவுசாலைகளிலும் வேலைசெய்து வருவதை உறுதிப்படுத்திக் கொள்வதும் தனியார் நெசவு நிலையங்களில் அவர்களது செலவில் பயிற்றப்பட்டோர் அவர்களிடமே வேலை செய்வது பற்றிக் கவனமெடுப்பதுமே அரசாங்கத்தின் தற்போதைய நோக்கமாகும். தனியார் நெசவு நிலையங்களில் வேலையில் அமர்ந்திருப்போர் நெசவு நிலையங்கள் மூடப்படும் பட்சத்தில் அரசாங்க நெசவு நிலையங்களிலும் கூட்டுறவுச்சங்க நெசவு நிலையங்களிலும் வேலையில்சேர உதவி அளிக்கப்படும்."

அரசாங்க நெசவு நிலையங்களிலும் கூட்டுறவு நெசவு நிலையங்களிலும் பயிற்சி பெற்றவர்களைத் தனியார் துறைநெசவு நிலையத்தினர் வேலைக்கு அமர்த்தக்கூடாதென கிராமமுன்னேற்ற சிறுகைத்தொழில் பகுதி உதவி அதிபரால் நெசவு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபத்தைத் தொடர்ந்து, 'வேலணை வீவிங் இன்டஸ்ரீஸ்' உரிமையாளர் திரு. க. அம்பிகாபதி 'தனியார் நெசவுநிலையங்களில் பயின்றவர்கள் அரசாங்க நெசவு நிலையங்களிலும், கூட்டுறவு சங்க நெசவு நிலையங்களிலும் வேலைசெய்ய முடியுமா?" எனக்கேட்டு எழுதிய கடிதத்திற்கு சிறுகைத்தொழில் உதவி அதிபர் அனுப்பிவைத்துள்ள பதிலில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

......

கோட்டை, புதன்

பொலனறுவை மாவட்டத்தில சுமார் 57,000 ஏக்கர் நிலத்தில நெல சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு நல்ல விளைச்சல் கிடைக்குமென பொலனறுவை மாவட்ட விவசாயக் குழு கருத்துத் தெரிவித்துள்ளது


## இன்று மலிவு விற்பனை கடைசி நாள்

உங்கள் புத்தாண்டு ஜவுளித்தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள

இதுவே கடைசி சந்தர்ப்பம்

தவறவிடாதீர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படத்துடன்

## அறிஞர் அண்ணாவின் இறுதியாத்திரை

எல்லா காட்சிகளிலும் காண்பிக்கப்படும்

அத்துடன்

பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழில் 40 நிமிடங்கள் வரை காண்பிக்கப்படும்.



யாழ். வின்ஸர் திரையில் தினசரி 4 காட்சிகள்

ராஜன், லட்சுமி, நிர்மலா, ரவிச்சந்திரன் நடித்த

## ஏன்?

அத்துடன்

## பரிசுத்த பாப்பரசர் 6-வது சின்னப்பரின் இலங்கை விஜயம்

30 நிமிடங்களுக்கு தமிழில் எல்லாக் காட்சிகளிலும் காண்பிக்கப்படுகின்றது



## யாழ். வெலிங்டன்

தினசரி பி.ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30, போயா நாட்கள் காலை 10-30 மணி

ப. நீலகண்டனின் டைரக்‌ஷனில் உருவாகி

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ஜெயலலிதா வாணிஸ்ரீ





முத்துராமன், அசோகன், சோ, ஓ. ஏ. கே. தேவர் மற்றும்பலர் நடித்த

சத்யா மூவிஸ்

## கண்ணன் என் காதலன்

அத்துடன்

பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழில்காண்பிக்கப்படும்


...யும் இடத்தில் தொல்லைகள் உருவாகலாம்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 31—12—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 சிறுவர் விருந்து

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 முத்திநெறி, 6-30 பெண்ணுலகம், 7-00 திரைகானம், 7-15 சித்திரம், 7-45 வாத்திய இசை 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 10-30 செய்தித்தொகுப்பு, 10-35 திருமறைக்கலா மன்றம், 11-15 கிறிஸ்தவ நிகழ்ச்சி


## வெஸ்லிசினிமா

காவிப்பாயி

தினசரி 2-30, 6-30, 9-30

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த

## நம் நாடு



## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 9-30

போயா நாட்கள் 2-30

கே. பி. சுந்தராம்பாள் நடித்த

## ஔவையார்



**MANOHARA**

Jaffna

Daily

4-30, 7-15 & 9-45 p.m.

Public holidays 10-30 a m

Clint Eastwood

Lee Marvin

in

PAINT YOUR WAGON

Scope-Color)


...குறிப்பிட்ட கோஷ்டி இந்தக் குற்றத்தின்பின் இருப்பது வழக்கு விசாரணையின் போது ஸ்தாபிதமாகியது. இந்தக் கம்பனி ஊழியர்கள் மூலம்தான் குற்றவாளி கும்பல் பார்சல்களைப் பெற்றது. இந்தப் பொதிகளிலிருந்து பொருட்களை இவர்கள் பெரு விலைக்கு விற்றனர். இதன் மூலம் கிடைத்த பணம் 'திருமண' நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறுதான் குற்றவாளிகள் இந்தத் தேசத்துரோக நடவடிக்கைக்கு பெயரிட்டனர்.

குற்றக் கூண்டில் 11 குற்றவாளிகள் மட்டும் இருக்கவில்லை, அவர்களின் அந்நிய தூண்டுதல் காரர்களும் இருந்தனர். இதை மறைக்கத்தான் லெனின்கிராட் வழக்குக் குறித்து மேற்கில் குய்யோ முறையோ என்று கூக்குரல் எழுப்பப்பட்டது. 'எஎன்-2' பயணிகள் விமானத்தின் ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்த எத்தனித்தவர்கள் யார்மீது

## ப. ச. உறுப்பினர் ஆட்சேபம்

பருத்தித்துறை, புதன்

இதுவரை கரவெட்டித் தபால்கந்தோரின் நிர்வாகத்துக்குட்பட்டிருந்த குடத்தனை, நாகர்கோவில் உப-தபாற் கந்தோர்கள் டிசம்பர் 16-ம் திகதி தொடக்கம் பருத்தித்துறைத் தபால் கந்தோரின் நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டதை எதிர்த்து நெல்லியடிப் பட்டினசபை உறுப்பினர் திரு நகைசுந்தரம் அடுத்த பட்டினசபைக் கூட்டத்தில் கேள்வி எழுப்புவதாக முன்னறிவித்தல் கொடுத்துள்ளார். தொகுதி அடிப்படையிலேயே இம் மாற்றம் நடைபெறுவது உண்மையானால் பருத்தித்துறைத் தபாற்கந்தோரின் நிர்வாகத்தின்கீழ் இயங்கும் உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள வல்வெட்டி, அல்வாய், மந்திகை உபதபாற் கந்தோர்களைக் கரவெட்டித் தபால்கந்தோரின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.


**REGAL**

Jaffna

Daily 4-45, 7, 9-45 p.m.

Poya days 4 shows

Vanessa Redgrave

in

THE LOVES OF ISADORA

(Adults)


மாலை: 6.00-கே. வி. நாராயணசாமி-பாட்டு, இரவு 9.30: ஏ. கே. ஸி. நடராஜன் கிளாரினட்.

**மியூஸிக் அக்கடமி**

பி.ப: 1.30-கே. ஆர். சரஸ்வதி-பாட்டு, பி.ப: 3.00- ரி. ஆர். சுப்பிரமணியம்-பாட்டு இரவு: 8.30. எம். எல். வசந்தகுமாரி-பாட்டு.

**இந்தியன் பைன்ஆட்ஸ்**

பி.ப: 3.30. டி. பசுபதி-பாட்டு, மாலை: 6.00. ராதா ஜெயலக்ஷ்மி-பாட்டு, இரவு: 9.30: எம். வி. இராமமூர்த்தி-பாட்டு.

(இமை-நிரு)

## ''வரியிலிருந்து இவர்களை விலக்கவும்''

நல்லூர், புதன்

யாழ்ப்பாணத்திலுள்ள வேதாரணிய சைவகுருமாருக்கு விசாவரியிலிருந்து விதிவிலக்கு அளிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நிறைவேற்றியுள்ளது.

......

## மதியுரைக் குழு

மாவிட்டபுரம். புதன்

காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலை மதியுரைக் குழுவின் தலைவராக திரு எஸ் கந்தசாமி தெரிவு செய்யப்பட்டுள்ளார், வைத்தியசாலை அதிபர் திரு ஐ பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்ற இத்தேர்தலில் அட்டென்டன் பிரிவில் தா பத்திநாதரும், இ வைரமுத்துவும் தெரிவுசெய்யப்பட்டனர்

......

## கொக்குவிலுக்கு நவீன சந்தை வேண்டும்

மாவிட்டபுரம் வியாழன்

கொக்குவில்பகுதி மக்களின் நலனை முன்னிட்டு அங்கு ஒரு நவீன சந்தை அமைக்கவேண்டும் என்று அரசைக் கோரும்தீர்மானம் ஒன்று கொக்குவில் பிரம்படி சனசமூக நிலையத்தின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

திரு வி சண்முகநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் கொக்குவில் புகையிரத நிலையத்துக்கு மின்சார இணைப்பு செய்யப்படவேண்டும் என்ற தீர்மானம் உட்பட மற்றும் சில தீர்மானங்களும்நிறைவேற்றப்பட்டன.

...கிராம சபையின் சரித்திரத்தில் இம் முறைதான் முதல் தடவையாக உபதலைவர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது,


**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**



உங்கள் புத்தாண்டு ஜவுளித்தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள

இதுவே கடைசி சந்தர்ப்பம்

தவறவிடாதீர்கள்

## டயரும்ஸ்

54 - 60, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.



விற்பனையாகின்றது

## 'ஈழநாடு' தினக்குறிப்பு 1971

முற்றிலும் புதிய அம்சங்கள் புகுத்தப்பட்டு விசேஷமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

60 பக்கங்கள் கொண்ட தகவல்கள்

- ★ அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறைகள்
- ★ போயா விடுமுறைகள்
- ★ பாடசாலை தவணை விடுமுறைகள்
- ★ உலக - இலங்கை புவியியல், குடியியல் சரித்திரம் சம்பந்தமான குறிப்புகள்
- ★ தபால் தந்தி விகிதங்கள்
- ★ பஸ், புகையிரத, விமான சேவை நேர அட்டவணை
- ★ கிரகங்களின் அட்டவணை

[ இன்னும் பல குறிப்புகள் ]

**விலை: ஒன்று 1 ரூ. 50 சதம்**

வியாபாரிகளுக்கு கழிவுண்டு.

'ஈழநாடு' (வர்த்தக அச்சகப் பகுதி)

த. பெ. எண். 49 யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசியல் சாஸனத்தில் மாற்றம் செய்வதே தேர்தலில் அடிப்படையாக அமையும்

## பத்திரிகையாளர்களிடம் பாரதப் பிரதமர் விளக்கம்

புதுடில்லி, டிச. 30

**அரசியல் சாஸனத்தில் மாற்றங்கள் கொண்டுவருவதை அடிப்படையாக வைத்தே தமது கட்சி அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடும் என்று இந்திய பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி கூறினார். அரசியல் சாஸனத்தின் எல்லா அம்சங்களையும் மாற்றுவது தமதுநோக்கமல்லவென்றும் அவசியமான பகுதிகள் மாற்றப்படுமென்றும் திருமதி காந்தி குறிப்பிட்டார்.**

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள், இந்தியப் பத்திரிகையாளர்கள் ஆகியோரடங்கிய இம்மகாநாட்டில் இந்திரா தனது அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி விபரித்தார். பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் தெளிவுடன் உடனுக்குடன் பதில் அளித்தார்.

இந்திய நாட்டுமக்களின் வாழ்வை முன்னேற்றுவதற்கு சில நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது அவசியம். இதற்காக இந்திய அரசியல் திட்டத்தில் சிலமாற்றங்களைச் செய்யவேண்டும். ஆனால் அடிப்படை அரசியல் திட்டத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது. இதற்கான மக்களின் அங்கீகாரத்தைப்பெறுவதற்காகவே லோக்சபை கலைக்கப்பட்டு புதிய இடைத்தேர்தலுக்கு உத்தரவிட நான் சிபார்சு செய்தேன். இந்த அரசாங்கத்தைசிறுபான்மை அரசாங்கமென்றும், அதனால் இவ்வரசாங்கம் காபந்து அரசாங்கமாக இருக்கக்கூடாதென்றும் எதிர்க்கட்சியினர் கூறிவருகின்றனர். லோகசபை கலைக்கப்படுவதற்கு முன்பே அரசாங்கத்திற்கு பலமான-போதிய ஆதரவு இருந்தது. இந்த அரசாங்கம் தொடர்ந்து தன் பதவியை [illegible] றது. இந்த விருப்பம் நிறைவேறினால் அதற்காக இந்தியா மகிழ்ச்சியடையுமென்றார்.

திடீர் நாடக பாணியில் ஆட்சிமன்றத்தைக் கலைத்துவிட்டீர்களே என்று ஒரு நிருபர் குறிப்பிட்டபொழுது இங்குள்ள பத்திரிகைகள் தான் இப்படி நாடகபாணியில் செயல்படுகின்றன. இந்த நடவடிக்கை நாடகபாணியானதல்லவென்றார்; ஆட்சிமன்றம் கலைக்கப்படலாம் என்ற கருத்து பல நாட்களாகவே இருந்துவந்துள்ளது என்றார்.

ஆட்சிமன்றத்தைக் கலைத்துவிட்டு மக்களின் கட்டளையைப் பெறும்படி எதிர்க்கட்சிகள் பலவும் பத்திரிகைகளும் கருத்து தெரிவித்து வந்துள்ளன. இந்த யோசனையை கடைசியில் நாங்கள் ஏற்றுக்கொள்வதென்று முடிவுசெய்து விட்டோம் என்று பிரதமர் சிரிப்புக்கிடையில் சொன்னார்.

### கூட்டுச் சேர்வதில்லை

1971-ம் ஆண்டு பெப்ரவரி 28 அல்லது மார்ச் முதல் வாந்திகதியில் நடைபெறவிருக்கும் இந்திய லோகசபைக்கான இடைத்தேர்தலில், தேசிய ரீதியில் எக்கட்சியுடனும் காங்கிரஸ் கட்சிகூட்டுச்சேராது. லோகசபைக்கான 520 தொகுதிகளிலும் அது அபேட்சகர்களை நிறுத்தும் என்று இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜகஜீவராம் இன்று இந்திய இடைத் தேர்தல்பற்றிக் கருத்துதெரிவிக்கையில் கூறினார்,

மேலும் அவர் கூறுகையில் தேசியரீதியில் கூட்டுச் சேர்வதில்லை என்றே நாம் முடிவுசெய்துள்ளோம் ஆனால் பிராந்திய நிலையில் தேர்தல் கூட்டுச் சேரலாம் என்றார்.

பாகிஸ்தான்

## தேசிய சட்ட சபை டாக்காவில் கூடும்

டாக்கா, டிச. 30

பாகிஸ்தான் தேசிய சட்டசபை அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் டாக்காவில் கூடவிருப்பதாகத் தெரிகிறது. கிழக்குப் பாகிஸ்தானில் கடந்த சூருவழியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நடைபெறவிருந்த 9 தேர்தல் தொகுதிகளில் அடுத்தமாதம் நடுப்பகுதிகளில் தேர்தல் நடைபெறலாமெனத் தெரியவருகிறது.

பாகிஸ்தான் தேசிய சட்டசபையில் அவாமி லீக் கட்சிக்குப் பூரண பெரும்பான்மை வாக்குகள் இருக்கின்றன. நெடுங்காலமாக கிழக்குப் பாகிஸ்தான் தலைநகரில் தேசிய சட்டசபை கூடவேண்டுமென்ற அவாமி லீக்கின் கோரிக்கையை ஒட்டி பாகிஸ்தானின் இரண்டாவது தலைநகரான டாக்காவில் இம்முறை தேசியசட்டசபை கூடவிருக்கிறது.

டாக்காவில் ஆயிரக்கணக்கான மக்கள் ஊர்வலம் நடத்தி டாக்காவில் தேசிய சட்டசபையைக் கூட்டுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட அவாமி லீக் கட்சிக்குப் பாகிஸ்தான் தேசிய சட்டசபையில் பெரும்பான்மை பலம் இருப்பதனால் இக்கோரிக்கையை தட்டிக்கழிக்க முடியாமல் போயிருக்கலாமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்,

கிழக்குப்பாகிஸ்தான் தலைநகரான டாக்காவை நவீன முறையில் அமைப்பதற்கு வெளிநாட்டுக் கட்டிடக்கலைஞர்கள், கிழக்குப் பாகிஸ்தானின் பொறியியல் நிபுணர்கள் ஆகியோரின் ஆலோசனையைக் கேட்டிருப்பதாக அறியப்படுகிறது.

6 பாஸ்க் தேசியவாதிகள் பற்றி

## ஜெனரல் பிராங்கோ உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை

மாட்றிட், டிசம்பர் 30

இருதினங்களுக்கு முன் பாகஸ்பெயின் இராணுவ நீதிமன்றத்தினால் மரணதண்டனை விதிக்கப்பட்ட 6 பாஸ்க் தேசிய வாதிகள் பற்றி எவ்வித முடிவும் தெரியவில்லை. இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து உலகின் பல பாகங்களிலிருந்தும் அவர்களுக்குக் கருணை காட்டுமாறு கோரி ஸ்பெயின் அரசாங்கத்திற்கு அவசர வேண்டுகோள்கள் விடுத்துள்ளனர்.

ஜெனரல் பிராங்கோ இரு [illegible]

பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்களும் வன்முறைச் செயல்களும் நடைபெறுவதாக அறியப்படுகிறது. பாக்ஸ் மாகாணத்தில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளனர். இதில் பெண்கள் முதியவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். சென்செபஸ்தியான் பகுதியிலும் வேலை நிறுத்தம் நடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தேசிய வாதிகளுக்கு அளிக்கப்பட்ட மரணதண்டனையை எதிர்த்து வேலை நிறுத்தம் செய் [illegible]

கைப்பற்றிய இடங்களிலிருந்து

## உடன்பாடு இல்லாமல் வெளியேற முடியாதாம்

### இஸ்ரேல் பிரதமர் கண்டிப்பு

டெல்அவிவ், டிச. 30

மேற்காசிய அமைதிக்கான உடன்பாடு ஒன்று ஏற்படுவதற்கு முன்னர் பிடித்த இடங்களை விட்டு இஸ்ரேல் வெளியேறப்போவதில்லை என்று இஸ்ரேல் பிரதமமந்திரி திருமதி கோல்டா மெயர் தெரிவித்திருக்கிறார்.

இஸ்ரேலியர் வெளியேறினால் போர் ஒய்வைத் தொடர்ந்து கடைப்பிடிக்க முடியாது என்று ஐக்கிய அரபுக்குடியரசுத் தலைவர் அன்வர் சதாத் அறிவித்திருக்கிறார்.

அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ள இஸ்ரேல் முடிவுசெய்திருக்கும் அதே வேளையில் இவ்வாறு முரண்பாடான கருத்துக்களை இரு தலைவர்களும் வெளியிட்டிருப்பதால் அமைதிப்பேச்சுக்கள் ஆரம்பமாவதில் மீண்டும் தடை ஏற்படுமோவென்று அவதானிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

மேற்காஸியாவுக்கான ஐ. நா. அமைதித் தூதுவர் டாக்டர் குனர் ஜாரிங் தலைமையிலான அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்வதென்று இஸ்ரேல் முடிவு செய்திருக்கின்றது. இந்தப் பேச்சுக்கள் முதலில் ஆரம்பமாகிய சமயத்தில் கடைப்பிடிக்கப்பட்ட போர் ஓய்வு ஏற்பாடுகளை எகிப்தியர் மீறியதாகக் கூறி இஸ்ரேல் பேச்சுக்களைப் புறக்கணித்துவிட்டு ஒதுங்கியிருந்தது. போர் ஓய்வுசமயத்தில் எகிப்தியர் சோவியத் நிபுணர்களின் உதவியுடன் ஏராள [illegible] நீடிக்கப்பட்டதை இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டனர்.

ஆனால் இப்பொழுது மீண்டும் போர் ஒய்வை நீடிப்பதற்கு எகிப்திய தலைவர் சில நிபந்தனைகளை விடுத்திருக்கிறார். அதேவேளையில் அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ள இஸ்ரேல் முன்வந்திருக்கின்றது.

### மந்திரி சபை ஏற்றது

டாக்டர் குனர் ஜாரிங் தலைமையில் நடைபெறவிருக்கும் அமைதிப்பேச்சுக்களில் கலந்துகொள்வதென்று இஸ்ரேல் செய்துள்ள முடிவை இஸ்ரேல் மந்திரிசபை நேற்று ஏற்றுக்கொண்டது.

இப்பேச்சுக்களில் கலந்துகொள்வது சம்பந்தமாக இஸ்ரேல் முன்நிபந்தனைகள் எதுவும் விதிக்கப்போவதில்லையென்று பிரதமமந்திரி திருமதி கோல்டா மெயர் மந்திரி சபையிடம் தெரிவித்திருக்கிறார்.

இருதரப்புக்குமிடையில் உடன்பாடு ஒன்றுஏற்படாதவரையில் கைப்பற்றியஇடங்களில் இருந்துஇஸ்ரேல் விலகுவதாய் இல்லையென்றும் திருமதி மெயர் அறிவித்திருக்கிறார்.

### சதாத் கருத்து

போர் ஒய்வை மீண்டும் நீடிப்பதனால் இஸ்ரேலியர் தாம் பிடித்துக்கொண்டுள்ள இடங்களை விடுத்து வெளியேறவேண்டும் என்று ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் அன்வர் சதாத் தெரி [illegible] மும் யுதாண்டிடமும் அறிவிப்பார்.

ஐக்கிய அரபுக்குடியரசின் பிரதமபேச்சாளரும் ஐ. நா. தூதுவருமான டாக்டர் மொகம்மத் எச். எல்-சய்யதுவும் தற்பொழுது கெய்ரோவில் தமது தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்திவருகிறார். நாளையதினம் அவர் மீண்டும் நியுயோர்க் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜோர்டான் பிரதிநிதி முகம்மத் எச். எல்டஃபராவும் வியாழனன்று நியுயோர்க் திரும்புகிறார்.

அமைதிப் பேச்சுக்கள் எப்பொழுது ஆரம்பமாகும் என்று தெரியவில்லை ஆனால் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்குமுன்னர் சம்பந்தப்பட்ட மூன்று நாடுகளின் தலைநகர்களுக்கும் டாக்டர் ஜாரிங் முதலில் விஜயம் மேற்கொள்ள வேண்டும் என்றுஇஸ்ரேல்கோரக்கூடும் என்று ஐ. நா. வட்டாரங்கள் கருத்து தெரிவித்தன. இந்த யோசனையை எகிப்தியரும் ஜோர்டானியரும் எதிர்க்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### அபகரித்த பகுதியில் அட்டூழியம்

அம்மான், டிச. 30

அபகரித்த அரபு பிரதேசங்களில் கொடூரமான அட்டூழியங்களை இஸ்ரேல் நடத்திவருகிறது.

பெய்ட்ஹனூன் முஹையர் [illegible]

## கொள்வனவை துரிதப்படுத்த 27 நெற்களஞ்சியங்கள்

கோட்டை, புதன்

நாட்டின் வடபகுதியிலும் தென்பகுதியிலும் தாமதமின்றி நெல் கொள்வனவு செய்ய புதிதாக 27 நெற் [illegible]

### தமிழ் எம். பி. க்களுடனும் ஆலோசிப்பார்

நல்லூர், புதன் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாங்கமாக இருக்கக்கூடா தென்றும் எதிர்க்கட்சியினர் கூறிவருகின்றனர். லோக சபை கலைக்கப்படுவதற்கு முன்பே அரசாங்கத்திற்கு பலமான-போதிய ஆதரவு இருந்தது. இந்த அரசாங்கம் தொடர்ந்து தன் பதவியை வகிக்கிறதே தவிர இது காபந்து அரசாங்கமாகப் பதவி வகிக்கவில்லை. எந்தவொரு ஜனநாயக ஆட்சியிலும் இது நடைபெறுவதுதான். எனக்குத் தெரிந்தவரையில் இதற்கு இந்திய அரசியல் சாஸனத்தில் இடம் இருக்கிறது: சட்டத்தைநான் ஆராய்ந்து பார்க்கவில்லை என்று பிரதம மந்திரி கூறினார்.

லோகசபை இடைத்தேர்தலை ஒரு காலத்திலும் மாகாண சட்டசபைகளுக்கான தேர்தலை இன்னொரு காலத்திலும் நடாத்துவது சரியா என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு. இதுபற்றிய சட்டத்தைநான் ஆராய்ந்து பார்க்கவில்லை. அமெரிக்காவில்கூட மாகாண சட்டசபைத் தேர்தலும் ஜனாதிபதி தேர்தலும் வெவ்வேறு காலங்களில்தான் நடைபெறுகிறது. இது மாகாணத் தலைவர்களைப் பொறுத்த விஷயம் என்றார். மேற்கு வங்காளம் பற்றிகுறிப்பிட்ட இந்திராகாந்தி, இதுபற்றி நான் எவ்வித முடிவும் செய்யவில்லை. உரிய காலத்தில் இதற்கும் தேர்தல் நடைபெற்றால் அது வரவேற்க வேண்டியதுதான் என்றார்.

மேலும் அவர் கருத்துதெரிவிக்கையில், மகாஜன் அறிக்கை நடைமுறைப்படுத்த வேண்டும். சிறுபான்மை மக்களுக்கு இருக்கக்கூடிய உண்மையான குறைபாடுகளை நாம் நீக்கியாக வேண்டும். பெரும்பான்மை மக்களின் மொழியான உருதுமொழி பாதுகாக்கப்படவேண்டும். அம்மொழியின் வளர்ச்சிக்கு நாம் பாடுபடவேண்டியுள்ளது. இந்தியநாட்டில் இந்து முஸ்லிம் என்ற வேறுபாட்டுக்கே இடமில்லை. இந்த உண்மையை இளம் முஸ்லிம் சந்ததியினர் நன்கு உணர்வார்கள்.

இந்தியாவிலுள்ள நகர கிராமப்புறப் பொருட்கள் சரியான முறையில் நாட்டின் உற்பத்தித் தேவைக்குப் பயன்பட வேண்டும். இதற்கான சோஷலிசத்திட்டங்களை கடைப்பிடித்து விரைவான பொருளாதார முன்னேற்றத்தைக் காண வேண்டும். இந்தியாவின் பொருளாதார நிலைமை முன்னையவிட இப்பொழுது மேன்மையுடையதாகவே இருக்கிறது என்றார்.

இந்திய-பாகிஸ்தான் உறவு பற்றிக் குறிப்பிட்ட அவர், பாகிஸ்தானுடன் இந்தியா மாமூலான உறவை ஏற்படுத்தவே விரும்புகி

## 27 நெற்களஞ்சியங்கள்

கோட்டை, புதன்

நாட்டின் வடபகுதியிலும் தென்பகுதியிலும் தாமதமின்றி நெல் கொள்வனவு செய்ய புதிதாக 27 நெற்களஞ்சியங்கள் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவை ஒவ்வொன்றும் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் நிறுவப்படுகின்றன. அடுத்தாண்டு முற்பகுதியில் இவைகள் யாவும் செயல்படவுள்ளன.

55,000 புசலுக்கு மேற்பட்ட நெல்லை இவைகொள்வனவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நெற் களஞ்சியங்களில் ஒரு அலுவலக அறையும் காவலாளிக்கு வேண்டிய அறையும் அமைக்கப்படும்.

## பழைய நாணயங்கள்

கோட்டை, புதன்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள நீலபுல கிராமத்தில் அகழ்வாராய்ச்சிப் பகுதியினர் புராதனகால செப்பு சுவடியொன்றைக் கண்டெடுத்துள்ளனர்.

இச்செப்புச்சுவடி கீர்த்தி நிஜங்கமல்ல மன்னனது காலத்தது எனக் கூறப்படுகிறது.

இக்கிராமத்தை யடுத்த குடியேற்றப்பகுதியில் 800 பழைய நாணயங்களைக் கொண்ட குடம் ஒன்றும் கண்டெடுக்கப் பட்டுள்ளது.

## வயோதிபருக்கு நள்ளிரவில் கத்திக்குத்து

மட்டுவில், புதன்

70 வயது வயோதிபர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சதாசிவம் என்ற இவ்வயோதிபர் நேற்று நள்ளிரவில் படுக்கையால் எழுந்து சிறுநீர் கழித்துவிட்டுத் திரும்பவும் படுக்கப் போனபோது கத்தியால் குத்தப்பட்டாராம், சாவகச்சேரிப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது. அபாயகரமான நிலையில் இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இது சம்பந்தமாக சாவகச்சேரி பொலிஸார் புலன் விசாரணை செய்கின்றனர்.

## தமிழ் எம். பி. க்களுடனும் ஆலோசிப்பார்

நல்லூர், புதன்

சகலதமிழ் ஆட்சிமன்ற உறுப்பினரையும் ஜனவரி மாதம் 2-ம் திகதி நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா சந்தித்துப்பேசவிருக்கிறார் தமிழ்ப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் குறித்து அமைச்சர் தமிழ் எம். பி. க்களுடன் கலந்துரையாடுவார். இதற்கான அமைச்சர் மைத்திரிபாலசேனநாயக்கா எம். பி. க்களுக்கு தந்திமூலம் அறிவித்துள்ளார்.

## புனரமைப்பு நடவடிக்கை

நல்லூர், புதன்

யாழ் மாவட்டத்திலுள்ள 49 மீன்பிடிச்சங்கங்களில் 13சங்கங்கள் செயலற்றிருப்பதினால் அவற்றை புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளில் கூட்டுறவு இலாகா ஈடுபட்டுள்ளது.

......

## "நேர்மையான நீதிபதிகள்"

பருத்தித்துறை, புதன்

"நீதியென்னும் தராசு நெறிதவறாது, கடமை நேர்மை உணர்ச்சியுடன் நீதி வழங்கிய பெருமகன் திரு. விக்னராசா ஆவர். இவருடைய கடமைக்காலத்தில் பருத்தித்துறை, சாவகச்சேரிப்பகுதிகளில் குற்றங்கள் குறிப்பிடக் கூடிய அளவுக்குக் குறைந்துள்ளன, சட்ட நுட்பங்களென்னும் சிக்கல்களை ஊடறுத்து நீதியைக் கண்டுபிடிக்கும் சிறப்பியல்புபடைத்த இவர் போன்றவர்களே சமுதாய நன்மைக்கு வேண்டியவர்கள்."

இவ்வாறு, ஆவிசாவலைக்கு மாறிச்செல்லும் பருத்தித்துறை நீதிபதி திரு. கே விக்னராசாவுக்கு நீதிமன்ற ஊழியர் நடாத்திய பிரிவுபசாரத்திற் பேசிய, பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிபதி திரு. எஸ். பாலேந்திரா கூறினார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பிரதம எழுதுவினைஞர். திரு பி. பாக்கியநாதன் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் மொழிபெயர்ப்பு முதலியார் திரு. ஜே. சதானந்தன்உட்படப் பலர் பேசினர்.

திரு. விக்னராசா நன்றி தெரிவித்தார்.

நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து உலகின் பல பாகங்களிலிருந்தும் அவர்களுக்குக் கருணை காட்டுமாறு கோரி ஸ்பெயின் அரசாங்கத்திற்கு அவசர வேண்டுகோள்களை விடுத்துள்ளனர்.

ஜெனரல் பிராங்கோ இது பற்றி [illegible]ந்திர அதிகாரிகளுடனும், ஸ்பெயினின் உயர் ஆலோசனைக் குழுவுடனும் ஆலோசனை நடத்திவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இந்தேசியவாதிகளுக்கு அளித்த தீர்ப்பை எதிர்த்து நாட்டின் ஆகியோரும் கலந்துகொண்டனர். சென்செபஸ்தியா[illegible] பகுதியிலும் வேலை நிறுத்[illegible] நடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தேசியவாதிகளுக்கு அளிக்கப்பட்ட மரணதண்டனையை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்[illegible]மாறு தொழிலாளர்களை ஸ்பெயின் கம்யூனிஸ்ட்கட்சி கேட்டுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

இதனை எதிர்த்து லண்டனிலும் ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன.

பிடிக்கப்பட்ட போர் ஒய்வு ஏற்பாடுகளை எகிப்தியர் மீறியதாகக் கூறி இஸ்ரேல் பேச்சுக்களைப் புறக்கணித்து விட்டு ஒதுங்கியிருந்தது. போர் ஓய்வுசமயத்தில் எகிப்தியர் சோவியத் நிபுணர்களின் உதவியுடன் ஏராளமான ஏவாயுதத்தளங்களை அமைத்துக் கொண்டதாகவும் அவைகளை அப்புறப்படுத்தினால் மாத்திரமே அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ள முடியுமென்று இஸ்ரேல் அறிவித்திருந்தது. பின்னர் போர் ஓய்வுக்கான காலக்கேடு

சதாத் கருத்து

போர் ஓய்வை மீண்டும் நீடிப்பதனால் இஸ்ரேலியர் தாம் பிடித்துக்கொண்டுள்ள இடங்களை விடுத்து வெளியேறவேண்டும் என்று ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் அன்வர் சதாத் தெரிவித்தார். அரபு மண்ணில் தொடர்ந்தும் இஸ்ரேலியர் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதற்கு அனுமதிக்கமுடியாது என்றார் திரு. அன்வர் சதாத்.

### டாக்டர் ஜாரிங் திரும்புகிறார்

மேற்காசிய அமைதிக்கான டாக்டர் குன்னர் ஜாரிங் மீண்டும் தமது கடமைகளை ஆரம்பிப்பதற்கு அடுத்த வாரம் வாக்கில் நியுயோர்க் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ள இஸ்ரேலியர் முடிவுசெய்ததைத் தொடர்ந்து தற்பொழுது மாஸ்கோவில் ஸ்வீடன் தூதுவராக இருந்துவரும் டாக்டர் ஜாரிங், அமைதிப் பேச்சுக்களுக்காகத்தான் திட்டங்களை பொதுச்செயலாளர் யுதாண்ட் தயாரிப்பதற்கு உதவும் வகையில் வேலைக்கேவந்து சேர்ந்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைதிப் பேச்சுக்களில் இஸ்ரேலின் ஆணைப்பிரதிநிதியாகக் கலந்துகொள்ள நியமிக்கப்பட்ட இஸ்ரேலின் ஐ. நா. தூதுவர் திரு. ஜோசப் தக்கோவா தம் நாட்டுத் தலைவர்களுடன் ஆலோசனைகள் கலந்த பின்னர் விரைவில் நியுயோர்க் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இஸ்ரேல் மீண்டும் அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ள முடிவெடுத்திருப்பதை திரு. தக்கோவா உத்தியோக பூர்வமாக டாக்டர் ஜாரிங்கிட

அட்டூழியம்

அம்மான், டிச. 30

அபகரித்த அரபு பிரதேசங்களில் கொடூரமான அட்டூழியங்களை இஸ்ரேல் நடத்திவருகிறது.

பேய்த்ஜானு முஹய்யர் என்ற கிராமங்களை ஆழ்ந்த பகுதிகளில் தம் சொந்த காணிகளில் விவசாயம்செய்யக் கூடாதென அரபுவிவசாயிகள் மீது ஆட்சியினர் தடை விதித்துள்ளனராம் இப்பகுதி நப்லுஸுக்கு அருகாமையில் உள்ளது.

இத்தடை ஏற்கனவே வறுமையில் வாடும் மக்களை மேலும் அவஸ்தைக்குள்ளாக்குகிறது என்று "அல்-திஃபா" பத்திரிகைகூறியது

மேலும் மேலும் யூத குடியிருப்புகளை நிறுவ இஸ்ரேல் திட்டமிட்டு வருகிறது. அரபு மக்களை அச்சுறுத்தி வைக்கஇஸ்ரேல் ஆட்சியினர் அட்டூழியங்களைகட்டவிழ்த்து வருகின்றனர். பெருந்தொகையானவர்களைசிறையில்தள்ளுகின்றனர் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

— —

## நெல்லியடி அமோகவெற்றி

பருத்தித்துறை, புதன்

வதிரி டயமண்ட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் புத்தூர் வீனஸ் உதைபந்தாட்டக் கோஷ்டியும், நெல்லியடி ஸ்பேஸ் கோஷ்டியும் மோதிக்கொண்டதில் ஸ்பேஸ் 6-0 கோல்களால் வெற்றியீட்டியது. கனகசுந்தரம், ஸ்ரீதரன் ஆகியோரின் ஆட்டம் பாராட்டப்பட்டது. திரு. டி. இரத்தினசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

# புராதன மனிதன் கட்டிய சூரிய பகவானின் கோயில்

## மத்திய ஆசியாவில் கண்டுபிடிப்பு

மாஸ்கோ, டிச. 30

தெற்கு சைபீரியாவில் துவா சுயாட்சிக் குடியரசில் உலுக்-கோரம் என்ற இடத்தில் லெனின்கிராட் புதைபொருள் ஆய்வாளர்கள்சமீபத்தில் கண்டு பிடித்துள்ள பெரியதிட்டுமேலும்மேலும் விலை மதிப்பிலாப் பயன்களைக் கொடுத்துள்ளது. புதைபொருள் ஆய்வுக் குழுவில் தலைவர் அலெக்ஸாண்டர் பிராக் என்பாரின் கணக்குப்படி அந்த நினைவுச் சின்னத்தின் விட்டம் 60 மீட்டர்கள்; மத்திய உருண்டை அமைப்பின் கொள்ளளவு 630 கனமீட்டர்கள் ஆகும்.

மெதுவாகவும், அரைமனதுடனும் ஆய்வாளர்களுக்கு ஒவ்வொரு புதிராக விடுவித்துக் கொண்டு வருகிறது 'பெரிய திட்டு' உலுக்-கோரம்-ன் மத்திய பகுதி ஒருவளையத்தினுல் சூழப்பட்டுள்ளது. மலைச் செம்மறி ஆடுகள், குதிரைகள், மற்றும் பல மிருகங்களின் உருவங்கள் கல்லினுல் செதுக்கப்பட்டுள்ள ஒரு படியரங்கத்தைக் கண்டனர் விஞ்ஞானிகள். அக்காலத்தியதும் அந்தப்பகுதியில் பிரபலமாவதுமான மங்கோலியக் குதிரைகளைப் போலல்லாது, மெல்லிய கால்களையும், மெலிந்த உடம்பு, அன்னத்தைப் போன்றகழுத்தையும் கொண்ட குதிரைகளை அவர்கள் ஏன் செதுக்கினார்கள்?

மத்திய ஆசியாவிலுள்ள நவீன துருக்மீனிய 'அகால் தேகின்' குதிரைகளை அவை ஒத்திருக்கின்றன என்பது இப்பொழுது தெரியவருகிறது. துவாவிலிருந்து ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் தூரத்திலிலுள்ள ஃபெர்கானுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பாறைப் படங்களின் பாணியை ஒத்திருக்கிறது. இச்சித்திரங்கள் என்று கூறுகிறார் அலெக்ஸாண்டர் பிராச்சின்.

ஒவ்வொன்றும் 22 மீட்டரகள் நீளமுள்ள 32 படிக்கட்டுகளை அகற்றியபின் விஞ்ஞானிகள் மீண்டும் ஒரு புதிரை எதிர் நோக்கினர். மத்திய பாகத்திலிருந்து இது போன்ற பாதைகள் சூரியக் கதிர்களைப் போன்று எல்லாத்திசைகளுக்கும்சென்றன 'திட்டு' முழுவதும் எடுத்த பின், சூரியனை, தரையில்படுத்திருப்பது போன்ற தோற்றத்தை ஒத்திருந்தது.

உலுக்-கோரம் மத்தியபகுயின்புதைபொருள் ஆராய்ச்சிகள், ஆய்வாளர்களுக்கு பல பொருள்களைக் கொடுத்துள்ளன. பழங்கால துருக்கிய போர் வீரனதும் மற்றொரு எனிஸ்ஸி கிர்கிஸியரதும், மூன்றாவதாக மங்கோலியர் காலத்தில் இருந்ததுமான மூன்று வகை தள்ளுவண்டிகளைக் கண்டனர் ஆய்வாளர்கள் 'திட்டின்' கண் அஸ்வாரத்தின் அடியில் இரண்டு மனித உடல்களின் மிச்சமீதங்களைக் கண்ட புதைபொருள் ஆய்வாளர்கள் மிகவும் தடுமாறினார்கள். இது பலியா அல்லதுசோக முடிவா?

இந்த நினைவுச் சின்னம் எதைக் காட்டுகிறது?

'இப்போதைய கருத்துப்படி ஸ்டெப்பி புல்வெளியில் சூரியனுக்காக கட்டப்பட்டுள்ள ஒருகோயிலைப் பார்க்கிறோம்' என்று கூறுகிறார் ஒரு விஞ்ஞானி. தற்செயலாக இன்னுமொருதிரை மறைவு அற்புதம் வெளிப்பட்டுள்ளது. கல் வளையத்தில் வடக்குப் பகுதியில் ஒரு சுரங்கப்பாதை செல்வதையும் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். சுரங்கப் பாதையில் கொஞ்சதூரம் உள்ளே சென்றதும் ஒரு காவல் நாயின் எலும்புக் கூடும் இருந்ததை அவர்கள் கண்டனர். மேலும் ஸ்கிதியன் காலத்திலுள்ள ஒருமரக்கோப்பையும் இருந்தது. ஒரு ரகசிய கல்லறைக்குப் போவதற்கான சுரங்கப் பாதையாக அது இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

"உறுதியான முடிவுகள் இன்னும் தெரியவில்லையானுலும், இப்போது ஒரு பெரிய விஷயம்மட்டும் உறுதியாகத் தெரிகிறது. மத்திய ஆசியாவின் கண்டுபிடிப்புக்களிலே இதுதான் மிகப்பெரிய நினைவு சின்னம். இங்கு நடத்தப்படும் புதைபொருள் ஆராய்ச்சி முழுவதும்இந்த ஆண்டில் பூர்த்தியாகிவிடும்."

# லெனின் கிராட் விசாரணை பற்றி 'டாஸ்' தரும் விபரம்

லெனின்கிராட், டிச. 30

சோவியத் விமானமொன்றைக் கடத்திச் செல்ல எத்தனித்து பிடிபட்ட 11 பேர் மீது லெனின் கிராட்டில் நடைபெற்று வந்த விசாரணை தீர்ப்புப்பற்றியும் இந்த கடத்தல் நிகழ்ச்சியின் பின்னணி பற்றியும் 'டாஸ் செய்தி ஸ்தாபனம் பின்வரும் விடயங்களை வெளியிட்டிருக்கின்றது.

'ஏஎன்-2' பிரயாண விமான ஊழியர்களைத் தாக்கி விமானத்தைக் கடத்திச் செல்ல எத்தனித்த குற்றவாளிகள் மீதான வழக்கு முடிவுற்றது.

லெனின் நகர நீதிமன்றம் மார்க் டிமிஷிட்ஸ் மீதும், எட்வார்ட்-குஸ்னெட்ஸோவி மீதும் மரண தண்டனை விதித்துள்ளது. ஒரு குற்றவாளிகள் குழுவை அமைக்கவும், விமானத்தைத் திசை திருப்பி தாய் நாட்டிற்குத் துரோகம் செய்துவிட்டு ஓடவும் இவர்கள் 1969ம் ஆண்டின் இறுதியிலிருந்து முயற்சித்து வந்துள்ளனர். இந்த துரோகத் திட்டத்தைச் செயல்படுத்த இவர்கள் ஜூன் 15ந் திகதி முயற்சித்தனர். இதன் மூலம் விமானச் சாரதிகளின் உயிர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதத்தில் இம் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டனர்.

9 குற்றவாளிகள் மீது அவர்களின் சுதந்திரத்தை மறுக்கும் பல்வேறு ரக தீர்ப்புகள் வழங்கப்பட்டன. தண்டிக்கப்பட்டவர்கள் 7 இனங்களின் ரஷ்ய சமஷ்டி

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

1—1—71 வெள்ளிக்கிழமை தேசிய வீரர்கள் தினத்தை யொட்டி 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் 2—1—71 சனிக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

### மணிவாக்கு

உன்னால் பிறர்க்கு நன்மை செய்ய முடியாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு. அதுவே நீ செய்யும் பெரும் நன்மையாகும்.

—விவேகானந்தர்.

ஈழநாடு
Eelanadu Ceylon Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box 49 Jaffna: Telephone: 389

[illegible] மார்கழி மாதம் 16-ம் [illegible] (31-12-70)

## 1970

இன்றுடன் முடிவடையும் 1970-ம் வருடம் நம் நாட்டைப் பொறுத்தவரையில் மக்கள் மத்தியில் பெரும்பாலும் புதிய நம்பிக்கையை ஏற்படுத்திய ஓர் ஆண்டாகவே கொள்ள வேண்டும். ஆட்சிபீடத்தில் மாற்றம் ஏற்படும் பொழுதெல்லாம் புதிய ஆட்சியை நம்பிக்கையுடன் மக்கள் வரவேற்பதும் அதேபோல் பழைய வருடம் முடிந்து புதிய வருடம் பிறக்கும் போது அதை நம்பிக்கையுடன் வரவேற்பதும் மக்கள் இயல்பு என்றாலும் இன்றுடன் முடிவடையும் வருடத்தில் நந்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றமும் புதிய அரசாங்கத்துக்கு இந்நாட்டின் பெரும்பான்மை மக்கள் அளித்துள்ள அமோக ஆதரவும் ஆட்சிக்கு வந்த பின் அரசாங்கம் கொடுத்து வரும் வாக்குறுதிகளும் எடுத்துவரும் நடவடிக்கைகளும் இந்நாட்டின் பெரும்பான்மையினரான சாதாரண குடிமக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது இந்நாட்டில் வாழும் சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில் குறிப்பாகத் தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் கடந்த சில வருடங்களைப் போலவே இன்றுடன் முடிவடையும் வருடமும் எதிலும் நிச்சயமற்ற நம்பிக்கையற்ற வருடமாக முடிவடைகின்றது மல்லாமல் புதிய வருடமும் எப்படியிருக்குமோ என்ற ஐயத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தி வைத்திருப்பதாகவே கருதக்கூடியதாயிருக்

ஆகியோரின் மறைவும் கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பினால் நேர்ந்த உயிர்ச் சேதமும் இன்றுடன் முடிவடையும் ஆண்டு ஏற்படுத்திய நீங்காத கறைகள் என்று சொல்லலாம்.

மேற்காசியாவில் மூன்று மாதங்கள் சண்டை நிறுத்தம் ஏற்பட்டதும் மேற்காசிய சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேல் மீண்டும் கலந்துகொள்வதற்கு இவ்வருடக் கடைசியில் ஒப்புக்கொண்டிருப்பது கிழக்கு. மேற்கு ஜெர்மன் அதிபர்கள் சந்தித்துப் பேசியது ஆகியவை உலகைப் பயமுறுத்திக் கொண்டிருந்த மற்றொரு உலக மகாயுத்த ஆபத்து நீங்கி அமைதியேற்படுமென்ற நம்பிக்கைக்குச் சாயல்காட்டிய சில நல்ல நிகழ்ச்சிகளாகும். இந்நிகழ்ச்சிகளுடன் இலங்கை உட்பட பரிசுத்த பாப்பரசர் ஆறாவது சின்னப்பர் சில நாடுகளுக்கு விஜயம் செய்து தரிசனம் கொடுத்ததையும் அமெரிக்காவிலும் மற்றும் சில மேற்கு நாடுகளிலும் திக்விஜயம் செய்துவிட்டு இந்தியா திரும்பும் வழியில் நந்நாட்டுக்கும் திவ்யஜீவன சங்கத் தலைவர் சுவாமி சிதானந்த மகராஜ் வருகை தந்ததையும் குறிப்பிடலாம்

போலந்தில் மக்களின் கிளர்ச்சி காரணமாக அந்நாட்டின் தலைவராக விளங்கிய கோமுல்கா பதவியிலிருந்து இறங்க நேர்ந்ததும் இந்தியாவில் ஆட்சிமன்றத்தைக் கலைத்து இடைக்காலத் தேர்தலை நடத்துவதற்கு பிரதமர் திருமதி இந்திரா காந்தி தீர்மானித்

# நம்பிக்கையும் ஏமாற்றமும் கலந்த 70-ம் ஆண்டு

1970-ம் ஆண்டு அரசியல், பொருளாதார, விடுதலை, விஞ்ஞான வரலாற்றில் குறிப்பிடக்கூடிய ஆண்டாகும். மனித சமுதாயத்தின் மாபெரும் வெற்றிகளை தன்னகத்தே கொண்டிருப்பதோடு, பல திடுக்கிடும் நிகழ்ச்சிகளையும், உலகத் தலைவர்களின் மரணங்களையும் தழுவி நிற்கிறது. விமானக் கடத்தல் தொடக்கம் இராஜதந்திரிகள் வரை இவ்வாண்டில் கடத்தப்பட்டிருக்கிறார்கள். அமைச்சர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசியல் தலைவர்கள் பதவி இழந்திருக்கிறார்கள்.

### இந்தியா

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல 1970-ம் ஆண்டு டிசம்பர் 27-ம் திகதி இரவு இந்திய லோகசபை கலைக்கப்பட்டது 1972-ம் ஆண்டுவரை பதவியில இருக்கவேண்டிய அரசு திடீரெ இடைத்தேர்தலுக்கு ஒழுங்குசெய்தது. ஆச்சரியத்துக்குரிய விஷயமல்ல, 520 தொகுதிகளைக் கொண்ட இந்திய லோக சபையில் ஜகஜீவன்ராம் தலைமைக் காங்கிரசுக்கு உள்ள இடங்கள் 228.

காங்கிரஸ்கட்சி பிளவுபட்டதும், மாணவர் கிளர்ச்சிகளும், ராஜ மான்ய ஒழிப்பு ஒருவாக்கால் தோல்வியடைந்ததை யடுத்து ஜனாதிபதியின் விஷேட அதிகாரத்தைக் கொண்டு அதனைச்சட்டமாக்கியது செல்லாதென சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்ததும் இவ்விடைக்காலத் தேர்தலை அவசியமாக்கியதெனக்கருதலாம்

### பாப்பரசர் விஜயம்

அபிவிருத்தியடைந்து வரும் தென்கிழக்காசியாவில் அமைதியின்மைக்கு பங்கம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் உலக அமைதிக்காகவே தன்னை அர்ப்பணித்துள்ள பரிசுத்த பாப்பரசர் தக்க தருணத்தில் இவ்வாண்டு தனது ஆசிய விஜயத்தை மேற்கொண்டதும் சமாதானத்தை ஆசிய நாடுகள்

நிறைந்தமத்திய கிழக்கில் சமாதானத்தையும், அமைதியையும் நிலைநாட்டிடவேண்டும் எனக்கடைசி வரை உழைத்து அதற்காகவே செயலாற்றிக்கொண்டிருக்கும் தருணத்தில் வெண்ணெய் திரண்டுவரும் தருணத்தில் தாழி உடைந்தது போன்று செப்டம்பர்மாதம் 28-ம் திகதி திடீர் மரணமானார். 1970-ம் ஆண்டின் பேரிழப்பு உலகத்தலைவர்களில் ஒருவரான இவரது மரணமாகும்.

### ஐரோப்பாவில்

பிரிட்டனில் எட்வேட் ஹீத்தின் கன்சர்வேட்டிவ் கட்சி ஹரோல்ட் வில்சனின் தொழிற்கட்சியைத் தோற்கடித்து அதிகாரத்தை அதனிடமிருந்து கைப்பற்றியமை ஐரோப்பாக் கண்டத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

மேற்கு ஜெர்மன் தலைவர் திரு. வில்லி பிராண்டின் வெற்றியும் ஐரோப்பா கண்டத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். இவர் கிழக்கு ஐரோப்பிய நாடுகளோடு நட்புறவை ஏற்படுத்தியுள்ளதோடு மேற்கு நாடுகளின் உறவையும் மேலும் ஸ்திரப்படுத்தித் தனது ஆட்சிக்குப் பலம் தேடியுள்ளார் ரஷ்யாவுடன் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திட்டுள்ளார். இதன்மூலம் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் போலந்தின் நட்பைப் பெற்றுள்ளார். இத்தகைய பல நல்லபலவேலைகளைச் செய்து ஒழுங்கு, சமாதானம், அமைதியாகியவற்றிற்கு உழைக்கும் இவரை 'ரைம்' சஞ்சிகை 1970-ம்ஆண்டின் பிரமுகர் எனப் புகழ்ந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

அடுத்து இத்தாலியில் அதன் வரலாற்றில் மட்டுமன்றி உலகவரலாற்றிலேயே முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது பல ஆண்டுகள் கத்திகானின் பெரும் எதிர்ப்புக்குள்ளாகிவந்த விவாகரத்து மசோதா கடந்த மாதம் நிறைவேற்றப்பட்டது.

### விஞ்ஞானத்துறை

உலகின் ஜனத்தொகை யைக் குறைக்க விஞ்ஞான

வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டு 200,000 பேர் வீடிழந்தனர். 1லட்சத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதுஇந்த1970ம் ஆண்டின் மிகப் பரிதாபமான இயற்கையழிவாகும்.

அடுத்து தென்னமெரிக்காவில் உள்ளபேரு எனினும் இடத்தில் கடந்த ஜூன் மாதம் பெரும் நில அதிர்ச்சி ஏற்பட்டது. 40 விநாடிகள்தான் இந்நில அதிர்ச்சி ஏற்பட்டதெனினும் 50,000 பேரைப் பலிகொண்டது. இதே போன்று மற்றுமொரு நில அதிர்ச்சிச்சம்பவம் இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் துருக்கியில் ஏற்பட்டு 1000பேரின் உயிரைப்பறித்தெடுத்தது

### பழம்பெரும் தலைவர்கள்

பிரான்சின் சார்ள்ஸ்டி கோல் இந்தோனேஷியாவின் சுகர்ணோ, போர்த்துக்கலின் டாக்டர் அந்தோனியோ சலசார் ஆகியோர் உலகவரலாற்றில்தமக்கென ஒருதனியிடத்தைப் பிடித்துக் கொண்ட அரசியல் தலைவர்களாவர் தமது அரசியல் வாழ்வில் இருந்து ஓய்வுபெற்றிருந்த இவர்கள் உலகவாழ்விலிருந்துஓய்வு பெற்றது இந்த ஆண்டிலேயாகும். 1958ம் ஆண்டு தொடக்கம் ஐரோப்பிய அரசியல் அரங்கின் பிரதான பாத்திரமான சார்ள்ஸ் டிகோல் நவம்பர்மாதம் மரணமானார்.

இந்தோனேஷியாவை கட்டி எழுப்பி அதன் சுதந்திரச் சிற்பியாகவும், முடிசூடா மன்னராகவும் 20 ஆண்டு கள் திகழ்ந்த சுகர்ணோ ஜூன் மாதம் காலமானார்.

அடுத்துடாக்டர் அந்தோனியோசலசார் போர்த்துக்கலின் சர்வாதிகாரியாக 30 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தவர் இவரும் இவ்வாண்டிலேயே காலமானார்.

### விமானக் கடத்தல்

இந்த ஆண்டு பெரும் விமானக்கடத்தல்கள் நடைபெற்றன விடுதலை இயக்கத்தினர் இவ்வித செயல்கள் மூலம் எதிரிகளுக்கு பொருளாதார இடையூறுகளைச் செய்வதின் மூலம் தங்கள்

கடத்தி ஜோர்டான் பாலைவனத்தில் வைத்திருந்தனர் அமெரிக்கா, பிரிட்டன், சுவிற்சர்லாந்து மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இந்தப் பிரயாணிகளில் அடங்கியிருந்தனர் இந்தப் பிரயாணிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினதும் பல நாடுகளினதும் வேண்டுகோளுக்கிணங்க விடுவிக்கப்பட்டனர் விமானங்கள் மூன்றையும் அரபுக் கொரில்லாக்கள் வெடிவைத்துத் தகர்த்தனர் விமானக்கடத்தல்மூலம் உலகப் பிரசித்தி பெற்றார் லைலா காலித்என்ற அரபுக் கொரிலாப்பிரிவைச் சேர்ந்த பெண் இவர் விமானக்கடத்தலில் ஈடுபட்ட பொழுது கைது செய்யப்பட்டு பிரிட்டனில் சிறை வைக்கப்பட்டு பின் விடுதலையானார்

இதேபோல சோவியத் யூனியனில் உள்ளூர்சேவையில் ஈடுபட்டிருந்த விமான மொன்றைதந்தையும்மகனுமாகிய இரு யூதர்கள் துருக்கிக்குக் கடத்தினர் அவ்விருவரையும் திருப்பி சோவியத்திற்கு அனுப்ப துருக்கி நீதிமன்றம் மறுத்துவிட்டது மேலும் விமானக்கடத்தலைச் செய்ய முயன்ற தாக இரு யூத இளைஞர்களுக்கு லெனின் கிராட் நீதிமன்றம் மரணதண்டனை அளித்தது

இந்த விமானக் கடத்தலை விட பணத்திற்காகவும் தங்களின் தேசிய விடுதலைக்காகவும் முக்கிய பிரமுகர்களைக் கடத்திக் கொலை செய்தும் மறைத்து வைத்தும் இருந்த நிகழ்ச்சிகள் பல உலகில் நடந்துள்ளன

கனடாவிலுள்ள குவபெக் தேசியவாதிகள் பிரிட்டிஷ் ராஜதந்திரி திரு ஜேம்ஸ் குரோசைக் கடத்திச் சென்றனர் அவர்கள் சிறையிலிருக்கும் தங்களது இயக்கத்தினரை விடுவிப்பதற்காக இச்செயலைப் புரிந்ததாகத் தெரிகிறது இதனைத் தொடர்ந்து குவபெக் தொழில் நவ அமைச்சர் திரு லொபட்டே கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் ஸ்பெயினில் பாஸ்க் தேசியவாதிகள் மேற்கு ஜேர்மன் அதிகாரியை கடத்திச் சென்றனர் பிரேசில் நாட்டிலி

## ஜயாறன் எழுதுவது

இலங்கையின்பணநிலைமை மோசமாக இருப்பதாயும். இம்முறை யாரும் வெளிநாடுகளுக்கு யாத்திரை செல்ல முடியாதென்றும் நிதி அமைச்சர் அறிவித்திருந்தார். 'முடியாது' என்று கூறியதை 'முடியும்' என்று மாற்றிவிடச்செய்துள்ளனர் இலங்கை முஸ்லிம் சமூகத்தவர்கள். தங்கள் சமயபக்தியாலும், ஒற்றுமையாலும் கட்டுப்பாட்டினாலும், வெற்றிபெற்றமைக்காக அவர்களையும் சிறப்பாக கல்வி அமைச்சரையும் பாராட்டவேண்டும்

'ஹஜ்'ஜுக்கு யாத்திரை செய்யவேண்டியது முஸ்லிம்களின் முக்கியசமயக் கடமைகளில் ஒன்றாகும் எளிய முஸ்லிம்களால் இதைநிறைவேற்ற முடியுமா என்பது சந்தேகம். வெளிநாடுகளுக்கு யாத்திரை செய்யக்கூடிய வாய்ப்புகள், சாதாரணமாக செல்வந்தர்களுக்குத்தான் இப்போது உள்ளது. சோஷலிஸ சமதர்மம் வருமானால் எல்லாரும்உலக மனைத்தும் சுற்றுப்பிரயாணம் செய்யக்கூடியதாக இருக்கலாம். அது எந்நாளோ!

அதற்கிடையே இம்முறை இலங்கையிலிருந்து 175 முஸ்லிம்கள் கப்பல் மார்க்கமாகக் 'ஹஜ்' யாத்திரை செய்ய தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். 43வயதுக்கு மேல் உள்ளவர்களும், இதற்குமுன் ஹஜ்ஜுக்குச் செல்லாதவர்களுமே, இம்முறை தெரிவு செய்யப்படுவராம் கல்வி அமைச்சரின் தலைமையில் 26 பேரடங்கிய ஒரு விசேஷகுழு இதற்காக அமைக்கப்பெற்றுள்ளது விமானத்தில் செல்லுவதை விடகப்பலில் செல்லுவதற்கு செலவு குறைவுதான். ஆனாலு அதற்காகும் பணமும் ஏழை முஸ்லிம்களிடம் ஏது?

0 0 0

மார்கழித் திருவாதிரை வரப்போகிறது. ஈழத்திலுள்ள சைவமக்களின்உள்ளமெல்லாம் சிதம்பரத்தின் பக்கம் திரும்பும். சிதம்பரம் சென்றுவர பணச்செலவு அதிகமாகாது. அப்படிச் செல்லவிரும்பும் சைவர்களில் சிலருக்காவது அரசாங்கம் விசேட அனுமதி அளிக்குமா?

ஈழத்து சைவர்களிடையே ஒற்றுமையோ, கட்

இலங்கையிலிருந்துபலரும் இந்தியாவுக்கு யாத்திரை செல்ல விரும்புவதுபோல், இந்தியாவிலிருந்தும் பலர் இங்கு யாத்திரைவர ஆவலுடன் உள்ளனர். இரு அரசாங்க அதிகாரிகளும் கலந்து பேசி, இரு நாடுகளுக்கும் பண நஷ்டம் இல்லாதபடி, பரஸ்பரம் யாத்திரைவிஷயமாக ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளமுடியும். தபால் அமைச்சர் திரு.குமாரசூரியரிடம் சைவ ஸ்தாபனப்பிரதிநிதிகள் தூதுசென்று இதைப் பற்றி. ஏன் தெரிவிக்கக் கூடாது? இரு நாடுகளுக்குமிடையே யாத்திரிகர்கள் தாராளமாகச் சென்றுவர அமைச்சர் செய்வதாயின், அவருக்குச்சிறப்பாக ஈழத்து சைவ சமூகத்தின் நன்றியும் வாழ்த்தும் உரித்தாகும்

0 0 0

ஈழத்திலிருந்து சில செல்வந்தர்கள் வழக்கம்போல், விமான மார்க்கமாக இம்முறையும் தமிழகம் சென்றுள்ளனராம் சென்னையிலே இசைவிழாக்களுக்கு சென்று விட்டு, சிதம்பரத்தில் திருவாதிரை தரிசனம் செய்து அவர்கள் திரும்புவார்கள். ஆனால் இதே வாய்ப்பு சாதாரண ஏழைகளுக்கும் கிடைக்கும்படி செய்ய முடியாதா? சமதர்ம சோஷலிஸம் பேசுகிறது நமது அரசாங்கம். யாத்திரை விஷயமாகவும் அதைக்காரியத்தில் எப்போது செய்யப்போகிறது? ஏழைகளும் மனிதர்கள் தான். அவர்களுக்கு மட்டும் யாத்திரை உரிமை கிடையாதா? பணக்கஷ்டமுள்ள இக்காலத்திலும், மனமுண்டானால் வழி நிச்சயம் உண்டு. மிக புத்தி நுட்பம் வாய்ந்த நிதி அமைச்சருக்கு இது பெரிய காரியமல்ல.

......

## கோரிக்கை

கோட்டை, புதன்

சினிமாத்தணிக்கை சபை தணிக்கைக்காக தாம் பார்க்கும் ஒவ்வொரு படத்திற்கும் 300ரூபா வழங்கப்படவேண்டுமென கோரியுள்ளது அடுத்த ஜனவரியிலிருந்து தணிக்கையாளர்பார்வையிடும் காட்சிகள் குதிரைப்பந்தையத் திடலிலுள்ள கைத்தொழிற் கண்காட்சிமன்பேத்தில் நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுடன் முடிவடையும் வருடமும் எதிலும் நிச்சய மற்ற நம்பிக்கையற்ற வருட மாக முடிவடைகின்றது மல் லாமல் புதிய வருடமும் எப்படியிருக்குமோ என்ற ஐயத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தி வைத்திருப்பதா கவே கருதக்கூடியதாயிருக் கிறது. பல்கலைக்கழக மாண வர் தெரிவு, பட்டதாரி ஆசிரி யர்கள் நியமனம் மற்றும் பல துறைகளிலும் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் இதற்குச் சான்று

என்றாலும் புதிய அரசாங் கம் ஆட்சிக்கு வந்து புதிய கொள்கைகளையும் திட்டங் களையும் அமுல் நடத்துவ தற்கு முன் பழையவற்றைச் சீர்செய்ய வேண்டியதிலேயே கடந்த சில மாதங்களும் கழிந்து போயிருக்கின்றன. இதுவரை எடுக்கப்பட்ட நட வடிக்கைகள் சாதாரண மக் களுக்குப் புதிய ஆண்டில் அதிக நன்மையைக் கொடுக் கும் என்றும் இந்நாட்டு மக் கள் அனைவரும் எவ்வித பாகுபாடுமின்றிச் சமத்துவ மாக நடத்தப்படுவார்கள் என்றும் ஆட்சிபீடத்திலுள்ள வர்கள் உறுதியளித்துவருவ தாலும் நாளை பிறக்கும் புத் தாண்டை நம்பிக்கையுடன் வரவேற்கலாம்.

ஐக்கிய அரபுக் குடியரசு அபர் கமால் அப்துல் நாஸர், பிரான்சின் மாஜி அதிபர் ஜெனரல் டி கோல் ... னாசம் காரணமாக அந் நாட்டின் தலைவராக விளங் கிய கோமுல்கா பதவியிலி ருந்து இறங்க நேர்ந்ததும் இந்தியாவில் ஆட்சிமன்றத் தைக் கலைத்து இடைக் காலத் தேர்தலை நடத்துவ தற்கு பிரதமர் திருமதி இந்திரா காந்தி தீர்மானித் ததும் இன்றுடன் முடிவடை யும் ஆண்டு தனது கடைசிக் காலத்தில் செய்த சில சாதனைகள் இவற்றின் பலா பலன்களைப் புதிய வருடந் தான் எடுத்துக்காட்டவேண் டும்.

விமானங்களைத் திசை திருப்புதல், அவற்றை வெடி வைத்துத் தகர்த்தல், அரசி யல் தலைவர்களைக் கடத்துதல் மற்றும் கொரில்லா நட வடிக்கைகள் மேற்காசியா விலும் மற்றும் சில நாடுகளி லும் உச்சக்கட்டத்தையடை ந்ததும் கொரில்லா நடவடிக் கைகள் காரணமாக அரபு நாடுகளுக்கிடையில் பிரச்னைக ளும் அழிவும் ஏற்பட்டதும் இன்றுடன் முடிவடையும் எழுபதாம் ஆண்டில்தான்

நன்மையும் தீமையும் கலந்த இந்த வருடம் உள் நாட்டிலும் உலக விவகா ரங்களிலும் எதிர்காலத் தைப் பற்றி ஓரளவு நம்பிக் கையை ஏற்படுத்திவிட்டு இன்றுடன் முடிவடைகிறது. வணக்கம் சொல்லி அதற்கு விடைகொடுப்போமாக.

... பங்கம் ஏற்பட்டுக்கொண்டி ரும் வேளையில் உலக அமைதிக்காகவே தன்னை அர்ப்பணித்துள்ள பரிசுத்த பாப்பரசர் தக்க தருணத் தில் இவ்வாண்டு தனது ஆசிய விஜயத்தை மேற் கொண்டதும் சமாதா னத்தை ஆசிய நாடுகள் வேண்டிநிற்கும் வேளையில் இச் சமாதானத் தூதர் 6-வது பரிசுத்த பாப்பரசர் 28000 மைல்கள் பிரயாணம் செய்து பாகிஸ்தான், பீஜி, அவுஸ்திரேலியா, இந்தோ னேஷியா, ஹொங்கொங், இலங்கை ஆகிய இடங்க ளுக்கு விஜயம்செய்துள் ளார்.

சோஷலிச சகாப்தத்துக்கு ஏற்ப சோஷலிசக்கொள் கையையுடைய பாப்பரசர் தம் மதத்தவர்க்கு மாத்திர மன்றி மற்றும் சகல மக்களை யும் ஆசீர்வதித்து உலக சமாதானத்துக்கு உழைக் கும்படி உத்தரவிட்டுள்ளார்.

**ஐ நா. வெள்ளி விழாவும் சீனாவின் முயற்சியும்**

உலக யுத்தங்களின் பின் னர் உலகில் நிலையான சமாதானத்தையும் அமைதி யையும் நிலைநிறுத்தும் நோக் கோடு அமைக்கப்பட்ட ஐ. நா நிறுவனம் வெள்ளி விழாக்கண்டதும் இவ் வாண்டே, வெள்ளி விழாக் கண்ட இவ்வேளையில் சீன வும் முன்னர்போல் ஐ நா வில் அங்கத்துவம் பெற முயற்சித்தது மறுபடியும் தோல்விகண்டது எனினும் இம்முயற்சி வீண்போக வில்லை என்பது பொதுச் சபையின் பெரும்பான்மை வாக்கைப்பெற்றதில்இருந்து தெரிகிறது ஐக்கிய அமெ ரிக்கா இந்தத்தடவை முன் னர் போன்று சீனாவின் அங் கத்துவத்துக்கு கூடிய எதிர்ப் புக்காட்டவில்லை. இதை நோக்குமிடத்து வருங் காலத்தில் ஐ நா வில் சீன வின் அங்கத்துவ முயற்சி வெற்றிபெறலாம் என ஊகிக்க இடமளிக்கிறது.

0 0 0

**நாஸர் மறைவு**

ஐக்கிய அரபுநாடுகளை ஒரு குடை கீழ் ஆண்டுவந்த நாஸர் பிரச்னைகளும் எந் நேரமும் யுத்த பயமும் ...

... வத்திகானின் பெரும் எதிர் ப்புக்குள்ளாகிவந்த விவாக ரத்து மசோதா கடந்த மாதம் நிறைவேற்றப்பட் டது.

**இயற்கை அழிவு!**

உலகின் ஜனத்தொகை யைக் குறைக்க விஞ்ஞான ரீதியாகப் பலவித நடவடிக் கைகளை விஞ்ஞான ஆராய் ச்சி நிபுணர்கள் அரசியல் தலைவர்கள் ஆகியோர் சேர் ந்து செய்துவரும் முயற்சி களைக் கண்டு அவர்களுக்கு உதவி செய்ய வந்தவன் போன்று இயற்கையன்னை பல பல இடங்களில் ஜனத் தொகையைக் குறைத்துள் ளாள். நவம்பர்மாதம் கிழக் குப்பாகிஸ்தானில் புயலும் ...

... கடத்தல்

இந்த ஆண்டு பெரும் விமானக்கடத்தல்கள் நடை பெற்றன விடுதலை இயக்கத் தினர் இவ்வித செயல்கள் மூலம் எதிரிகளுக்கு பொரு ளாதார இடையூறுகளைச் செய்வதின் மூலம் தங்கள் இலட்சியங்களை அடைய முயன்றனர் அரபு இஸ்ரேல் பிரச்னையில் அரபுக் கொரி லாக்கள் இவ்வித நடவடிக் கையில் இறங்கினர் மேற் காசிய சமாதானத்தூதுவர் டாக்டர் குணார் ஜாரிங் சமாதானப் பேச்சு வார்த் தைகளை எதிர்க்கும் நட வடிக்கையாக 300பிரயாணி களுடன் மூன்று விமானங் களை துப்பாக்கிமுனையில் ...

... டர்ந்து குவபெக் தொழில் நவ அமைச்சர் திரு லொ பட்டே கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் ஸ்பெயினில் பாஸ்க் தேசிய வாதிகள் மேற்கு ஜேர்மனி அதிகாரியை கடத்தின னர் பிரேசில் நாட்டிலி ருந்த சுவிற்சர்லாந்துத் தூதுவர் திரு பூக்கரை பிரேசில் தீவிரவாதிகள் கடத்தினர்

இவை அரசியல் காரணங் களுக்காகச் செய்யப்பட் டவை இவற்றைவிட பணம் பெறுவதற்காகவும் ஒருவ ரின் மனைவியையும் இன் னொருவரின் குழந்தையை யும் கடத்திய நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன

**மகாஜன சம்பத...**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 02J000012 | 19T000630 |
| 18P000425 | 04K000670 |
| 13L000569 | 02B000606 |
| 08L000174 | 19Q000317 |
| 14Z000191 | 10P000071 |
| 13N000911 | 03H000832 |
| 12H000112 | 08O0 0465 |
| 21M000436 | 06A000784 |
| 09M000962 | 03V000951 |
| 12J000426 | 20Y000559 |
| 01S000666 | 02S000830 |
| 02T000807 | 20B000445 |
| 23E000824 | 19Z000187 |
| 15G000427 | 20B000410 |
| 07D000273 | 05D000428 |
| 06O000743 | 05X000018 |
| 07T000458 | 02K000978 |
| 11Y000859 | 19M000589 |
| 05H000282 | 06X000806 |
| 02T000195 | 20P000091 |
| 11B000425 | 16S000564 |
| 13P000904 | 04L000895 |
| 18Q000122 | 10G000559 |
| 05Y000881 | 04B000825 |
| 16S000433 | 22A000769 |
| 11V000505 | 09Q000603 |
| 18S000861 | 17P000030 |
| 05J000707 | 06Q000269 |
| 16F000152 | 01R000834 |
| 09N000030 | 24T000405 |
| 10W000759 | 10C000414 |
| 24F000309 | 05J000713 |
| 16P000841 | 10N000029 |
| 21R000831 | 16E000075 |
| 03Q000435 | 16S000092 |
| 04B000868 | 02J000652 |
| 17Y000694 | 20A000174 |
| 02P000715 | 13T000074 |
| 08M000114 | 20S000247 |
| 07N000703 | 13L000693 |
| 05G000148 | 12E000473 |
| 06O900639 | 19A000422 |
| 07[illegible]000057 | 05C000449 |
| 01Q000732 | 06K000215 |
| 07W000152 | 08K000677 |
| 07W000006 | 10D000068 |
| 06X000259 | 16Y000974 |
| 02M000804 | 19B000806 |
| 09N000388 | 21M000744 |
| 01L000802 | 17Q000402 |
| 11N000074 | 08C000381 |

| | |
|---|---|
| 19S000044 | 09J000118 |
| 20N000697 | 08Q000006 |
| 12V000236 | 10Q000605 |
| 13R000334 | 11L000132 |
| 13U000961 | 09C000896 |
| 18T000064 | 18V000599 |
| 04S000451 | 17K000992 |
| 24Q000289 | 17V000624 |
| 12Q000345 | 12F000431 |
| 18E000537 | 19Q000791 |
| 04W000601 | 08B000321 |
| 10A000050 | 04F000151 |
| 13T000404 | 01X000275 |
| 13F000846 | 05M000876 |
| 01Y000707 | 07Y000197 |
| 01D000875 | 21P000881 |
| 16X000455 | 05E000402 |
| 19 M 000758 | |

... பக்கம் திரும்பும். சிதம்பரம் சென்றுவர பணச்செலவு அதிகமாகாது. அப்படிச் செல்லவிரும்பும் சைவர்க ளில் சிலருக்காவது அரசாங் கம் விசேட அனுமதி அளிக் குமா?

ஈழத்துச் சைவர்களி டையே ஒற்றுமையோ, கட் டுப்பாடோ இல்லை. அவர் கள் செல்வாக்கும் மிகக் குறைவு. இந்நிலையில் அவர் களுக்காகப் பேச யார் இருக் கிறார்கள். பேசினாலும் அனு மதி கிடைக்குமா என்பது சந்தேகம். ஜனவரி முதல் வாரத்திலிருந்து தலைமன் னார் — ராமேஸ்வரம் கப் பல் மீண்டும்ஓடுமாம். செலா வணி அனுமதிக்காவிடினும் ரயில் மார்க்கமாகச்செல்ல இலங்கையர்களுக்கும் அனு மதி அளிப்பின் எவ்வளவோ உபகாரமாக இருக்கும். ஆனால் சைவ ஸ்தாபனங் கள் ஒன்றாயினும் இதுவரை இதற்கான அனுமதி கேட்க வில்லை முயற்சி எடுக்கக் கூட அவர்களுக்கு உற்சாக மும் நம்பிக்கையும் இருப்ப தாகத் தெரியவில்லை. சைவப் பெரியார்கள் வருடம் இரு முறை சிதம்பர தரிசனம் செய்துவந்தனர். அப்போது ரயில், விமானம் இல்லாத காலம். சந்திரனுக்குச்செல் லும்படி, விஞ்ஞானம் வளர் ச்சிபெற்ற இக்காலத்திலே, பக்கத்திலுள்ள சிதம்பரத் துக்கும்கூட செல்லமுடியாத படி தடைகள் போடப்படு கின்றன! தக்க முயற்சிகளை எடுத்தால் இத்தடைகளும் தளர்த்தப்படலாமென்ப தற்கு, முஸ்லிம்களின் வெற்றி ஓர் அத்தாட்சியாக வும் நம்பிக்கையாகவுமுள் ளது

... கும் ஒவ்வொரு பட்டதாரி க்கும் 300ரூபா வழங்கப்பட வேண்டுமென கோரியுள் ளது அடுத்த ஜனவரியிலி ருந்து தணிக்கையாளர்பார் வையிடும் காட்சிகள் குறி ரைப்படத்தையத் திடலி லுள்ள கைத்தொழிற் கண் காட்சிமன்பேத்தில் நடை பெறும்

## உணவுப் பொருள்

கோட்டை, புதன்

கடந்தவாரம் கொழும்பு துறைமுகத்தில் 677 தொன் வெங்காயம், 136 தொன் செத்தல் மிளகாய், 24,539 தொன் சீனி, அரிசி, மாவு ஆகியன இறக்குமதி செய் யப்பட்டன. காலித்துறை முகத்தில் 2,832 தொன் அரிசி இறக்குமதி செய்யப் பட்டது அத்துடன் 1 382 தொன் ரப்பர் இலங்கையிலி ருந்து ஏற்றுமதி செய்யப் பட்டது.

## கலப்புத்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சோஷலிஸம் ஐக்கியத்தின் மீதுதான் கட்டியெழுப்பப் படமுடியும் ஆனால் அரசாங் கத்தின் கொள்கைகள் இரண்டு சமூகங்களையும் பிரித்து வைப்பதாகவே இருக்கின்றனவென்று அவர் குறிப்பிட்டார். இதைச்சுட் டிக்காட்டினால் நாங்கள் வகுப்புவாதம் பேசுவதாக சொல்லப்படுகிறோம் ஆனால் உண்மையில் அரசாங்கம் தான் வகுப்புவாதக்கொள் கைகளைக் கடைப்பிடிக்கிறது என்று அவர் மேலும் சொன் னார்.

— சி பி ஏ

# புலோலி கிராமசபை தேர்தல் முடிவு

புலோலி, புதன்

புலோலி கிராம சபைத் தேர்தல் இன்று நடைபெற் றது. தற்போதைய தலைவர் திரு தம்பு சிதம்பரப்பிள்ளை போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். மற்றும் மூன்றும் வட்டாரத்தில் திரு கே கேசவநம்பியும், பத் தாம் வட்டாரத்தில் திரு வேல்முருகு சுந்தரலிங்கமும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டவர்களாவர் வெற்றிபெற்றோர் விபரம் பின்வருமாறு:

1-ம் வட்டாரம் திரு இ சிவச்செல்வம்

2-ம் வட்டாரம்- திரு ச குமாரசாமி

3-ம் வட்டாரம்- திரு கே கேசவநம்பி(போட்டியில்லை)

4-ம் வட்டாரம்- திரு செல்லையா கந்தையா

5-ம் வட்டாரம்- திரு வே கதிராமு

6-ம் வட்டாரம்- திரு சிதம்பரப்பிள்ளை சின்னையா

7-ம் வட்டாரம்- திரு யோகரத்தினம் செல்வராசா

8-ம் வட்டாரம்- திரு சங் கரப்பிள்ளை கணபதிப் பிள்ளை

9-ம் வட்டாரம்- திரு தம்பு சிதம்பரப்பிள்ளை (தற் போதைய தலைவர் போட்டி யில்லை)

10-ம் வட்டாரம்- திரு வேல்முருகு சுந்தரலிங்கம்

11-ம் வட்டாரம்- திரு வேலுப்பிள்ளை விஜுசி

12-ம் வட்டாரம்- திரு வைத்திலிங்கம் சிதம்பர பிள்ளை.

# காரைநகர் தெற்கு கிராமசபை தேர்தல் முடிவு

சுழிபுரம், புதன்

காரைநகர் தெற்கு புதிய கிராமசபையின் பொதுத் தேர்தல் நேற்று முன்தினம் நடை பெற்றது. தற்போ தைய காரைநகர் கிராம சபையின் தலைவர் திரு கே வி. விஸ்வலிங்கம் மூன்றும் வட்டாரத்தில் போட்டி யிட்டு தோல்வியடைந்துள் ளார். இவர் காரைநகர் கிராமசபையின் நீண்டகால அங்கத்தவராக இருந்து வந் துள்ளார். மொத்தம் பதி னொரு வட்டாரங்களிலும் 27 பேர் போட்டியிட்டனர். எல்லா வட்டாரங்களிலும் பலத்தபோட்டி நடைபெற் றன. போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விபரம் பின் வருமாறு:

1-ம் வட்டாரம்- திரு சி மார்க்கண்டு.

2-ம் வட்டாரம்- திரு ஐ பரமு.

3-ம் வட்டாரம்- திரு ஏ வி ஆறுமுகம்.

4-ம் வட்டாரம்- திரு கே வீரகத்திப்பிள்ளை.

5-ம் வட்டாரம்- திரு க முத்துசாமி.

6-ம் வட்டாரம்- திரு க ஆறுமுகம்

7-ம் வட்டாரம்- திரு வி சண்முகம்.

8-ம் வட்டாரம்- திரு கே அமிர்தசிங்கம்

9-ம் வட்டாரம்- திரு ரி சங்கரப்பிள்ளை

10-ம் வட்டாரம்- திரு ஏ தம்பிராசா.

11-ம் வட்டாரம், திரு கே சாம்பரம்.

## இன்று விருந்தோம்பல்

யாழ்ப்பாணம், வியாழன்

வலிகாமம் மேற்கு ப நோ கூ ச சமாசப் பணி யாளரின் வருடாந்த நல் விருந்தோம்பல் நிகழ்ச்சி இன்று(31-12-70) பிற்பகல் 6 30க்கு சமாசமின் தறி நெசவாலைத் திறந்தவெளி அரங்கில் நடைபெற விருக் கிறது இந் நிகழ்ச்சியில் பல இன்னிசை நாடக நிகழ்ச்சிக ளும் நடைபெறும்.

# காமன்வெல்த்திலிருந்து உகண்டா விலகும்?

கம்பாலா. டிச 30

தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் விற்க முடிவுசெய்தால் உகண்டா காமன்வெல்த்திலிருந்துவில கிக்கொள்ளும் என்று மீண் டும் வலியுறுத்தி யிருக்கின் றது.

ஜனவரி 14ம் திகதி சிங்கப் பூரில் ஆரம்பமாகவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டில் தென்னாபிரிக்காவுக்கு பிரிட் டன் ஆயுதம் விற்கவிருக்கும் பிரச்னையை உகண்டா கிள ப்ப விருப்பதாக அறிவித் துள்ளது பிரிட்டன் ஆயுதம் விற்கவிருக்கும் விஷயத்தில் அமெரிக்கா கடைப்பிடிக் கும்கொள்கையை உகண்டா வெளிநாட்டமைச்சர் பாராட்டினார். இதே சமயம் இந்த விஷயத்தில் அமெ ரிக்கா இன்னும் அதிக மாகவே பயனுள்ள வகை யில் ஏதாவது செய்ய முடி யும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கோட்டை, புதன்

இலங்கையிலுள்ள மொத் தம் 14,220கூட்டுறவு இயக் கங்களில் 5000 கூட்டுறவு இயக்கங்கள் செயல்படாம லிருக்கிறன எனத் தெரிய வருகிறது

## இடமாற்றம்

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை அரசி னர் வைத்தியசாலையில் மலேரியா தடுப்பு இயக்க இரத்த பரிசோதகராக கடமைபுரிந்த திரு ரி ஆறுமு கம் நல்லூர் மலேரியாதடுப்பு கந்தோருக்கு ஜனவரிமுதல் இடமாற்றம் செய்யப்பட் டுள்ளார்.

0 0 0

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை நீதிமன்ற பிரதம எழுதுவினைஞர் திரு எம். அருந்தவராசா புதிய ஆண்டிலிருந்து மட்டக்கள ப்புபிஸ்கால் கந்தோருக்கும், சுருக்கெழுத்தாளர் திரு எஸ் ஜீவானந்தம் அனுரா தபுரம் மாவட்ட நீதிமன் றத்திற்கும், திரு வீ வேலும் மயிலும் கொழும்புக்கும், திரு. பி. தியாகராசா பொல னறுவை மாவட்ட நீதிமன் றத்திற்கும், அச்சுஎழுத்து வினைஞர் திரு. எஸ், கதிர வேற்பிள்ளை நாரஹன்பிட்டி போக்குவரத்துக் குற்றத் தடுப்பு நீதிமன்றத்திற்கும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற எழுது வினைஞர் திரு எஸ். சிவபாதசுந்தரம் வவனியா பிஸ்கால் காரியா லயத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பலாலி வசாவிளான் பொதுச்சுகாதாரப் பரிசோ தகர் திரு. எஸ் பரமேஸ் வரன் சிலாபத்திற்கும் மாற் றப்பட்டுள்ளார்.

## பருத்தித்துறையிலிருந்து இரு புதிய பஸ் சேவைகள்

பருத்தித்துறை, புதன்

வவனியாவிலிருந்து காலை யில் யாழ்தேவியைத் தொடர்ந்து காங்கேசன் துறை செல்லும் புகைவண்டியில் பிரயாணம் செய் பவர்களின் வசதிக்காக பருத்தித்துறை- கொடிகா மம் பாதையில் நெல்லி யடிக்கு ஊடாக ஒரு பஸ் சேவை வேண்டுமென்றும் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பாதையில் கொற்றாவத்தை க்கு ஊடாக ஒரு பஸ்சேவை வேண்டுமென்றும் பிரயாணி கள் சங்கம் கோரியிருந் ததை இ போ ச ஏற்றுக் கொண்டது

உடுபிட்டித் தொகுதி எம். பி திரு க ஜெயக்கொடியின் இல்லத்தில் நடந்த ஒரு கூட் டத்தில் பருத்தித்துறை இ போ ச உதவி அதிகாரி திரு வி சபாபதி பிரஸ்தாப கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார். மேலும், அடு த்தமாத ஆரம்பத்திலிருந்து பஸ்நிலையத்தில் நேரசூசிகை பகிரங்கமாக வைக்கப்பட வேண்டுமென்னும் கோரிக் கையையும் அவர் ஏற்றுக் கொண்டார். நியாயவாதி திரு எஸ் உருத்திரன், திரு ஏ கந்தசாமி, உடுப்பிட்டி கிராமசபை உறுப்பினர் திரு கே அண்ணாமலை ஆகி யோர் இம் மகாநாட்டிற் கலந்துகொண்டனர்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 68-ம் இலக்கத்தி லுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org